www.tamilarangam.net



Raya

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

# சுவடுகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுவடுகள்

## வாசகர்கள்

## சந்தா

* சந்தா அனுப்பியவர்கட்கு நன்றி. இன்னும் சிலர் சந்தாப் பணத்தை அனுப்பவில்லை. தயவு செய்து சுவடுகளின் சந்தாப் பணத்தை உரிய காலத்தில் அனுப்பி உதவுமாறு வேண்டுகிறோம்.

* சுவடுகளில் வெளியிடத் தரமான படைப்புகள் வாசகர்களிடம் இருந்து வரவேற்கப்படுகின்றன. அனுப்பப்படும் படைப்புகளின் பிரதியைப் படைப்பாளிகள் தம்முடன் வைத்திருக்குமாறு வேண்டுகிறோம். நடைமுறைச் சிக்கல் காரணமாக பிரசுரமாகாத படைப்புகளைத் திருப்பி அனுப்ப முடிவதில்லை.

* உங்கள் நண்பர்களுக்கும் சுவடுகளை அறிமுகம் செய்யுங்கள். சுவடுகள் பற்றிய உங்கள் அபிப்பிராயங்களைத் தாராளமாக எழுதுங்கள். நாகரீகமான எந்தக் கடிதமும் பிரசுரிக்கப்படும்.

* சுவடுகளின் சந்தா .

சகல நாடுகட்கும் 300 குறோணர்களாக (நோர்வே) ஆக்கப்பட்டுள்ளது. சந்தாப் பணத்தை வங்கி ஊடாக மாத்திரமே செலுத்தவும். எமது வங்கிக் கணக்கிலக்கம்: 160752 13062

நன்றி

எமது முகவரி:
SUVADUHAL
Herslebs Gate 43,
0578, Oslo 5

இலங்கையில் தொடர்ச்சியாகப் பல தரப்பினராலும் மனித உரிமைகள் மீறப்பட்டு வருகின்றன. இவை மக்கள் மீதும் தேசத்தின்மீதும் உண்மையான பற்றுதல் கொண்டிராதவர்களாலேயே நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இந்த வன்முறைகளாலும் மனித உரிமை மீறல்களாலும் தேசமும் மக்களும் சின்னாபின்னப்பட்டுப் போயுள்ளனர். இவ்வாறான செயல்களில் இலங்கை அரசு, (இந்தியாவில் உள்ள இலங்கையர்மீது) இந்திய அரசு, விடுதலைப் புலிகள், ஈபிஆர்எல்எஃப், ஏனைய கொழும்பு இயக்கங்கள் என்பன தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றன. இது நிறுத்தப்படாமல் தொடர்கிறது.

இந்தத் துயர்நிலை நீங்க உழைப்பது அனைத்து மக்களதும் கடமையாகும். மாற்றுக் கருத்து உடையோரைச் சிறையில் அடைத்து வதைபுரியும் கொடுமை இன்றும் தொடர்கிறது.

சகல அரசியல் கைதிகளும் எதுவித நிபந்தனையும் இல்லாமல் விடுவிக்கப்பட வேண்டும் எனவும், சகலதரப்பு மனித உரிமை மீறல்களும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் சுவடுகள் அனைத்துத் தரப்பினரையும் பகிரங்கமாக வேண்டுகிறது. தாய்நாட்டின் துயர்நீங்குவதில் அக்கறை கொண்ட அனைவரும் இந்த வேண்டுகோளை விடுக்கவேண்டும் எனவும் சுவடுகள் வேண்டுகிறது.

### சமுத்திரன் பதில்கள்

* வாசகர் கேள்விகளுக்குப் பதிலளித்துவந்த சமுத்திரன் வெளிநாடு சென்றிருந்த காரணத்தால் அவரது பதில்கள் கடந்த இரு இதழ்களில் இடம்பெறவில்லை. அடுத்த இதழில் இருந்து அவை தொடர்ந்து இடம்பெறும்.

சுவடுகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அகதிகளுக்குத் தேவைக்கும் ஐரோப்பா

## மூன்று தமிழர்கள் தீயில் பலி!



எரிந்த வீட்டில்
கிடந்த உடல்கள்
அன்றுபோலவே
இன்று அகதிகள்
எரியும் நெருப்பில்
எண்ணை தூவும்
செய்தியந்திரம்
அகதிகள்மேல்
பழியைப் போடும்.
விடியும் என்று
வந்தவர்கள்
இங்கு விடிவது
உயிர்களை
எடுப்பதற்காகவா?
*- வாணி -*

அண்மையில் ஜேர்மனியில் நடந்த இன்னொரு கொடிய நாஸித் தாக்குதலில் இலங்கை அகதிகள் குடும்பம் ஒன்று தீக்கிரையாகியுள்ளது. லெபனான், துருக்கி, சிரியா, இலங்கை அகதிகள் இருபதுபேர் தங்கியிருந்த கட்டிடம் ஒன்றில் நாஸிகள் தீயிட்டபோதே இலங்கை அகதிகள் மூவர் கொண்ட குடும்பம் பலியானது. ஹெசன் மானிலத்தில் உள்ள லம்பர்ற்ஹைம் என்ற இடத்தில் நிகழ்ந்த இந்த விபத்தில் நிலீமா (25வயது, நான்கு மாதக் கர்ப்பிணி), மொகைதீன் (30), மூபக் (13மாதக் குழந்தை) ஆகியோரே பலியாகியோராவர். இவர்கள் தெஹிவளையைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் வசித்த கட்டிடத்தின் படிகளில் நாஸிகளால் வைக்கப்பட்ட தீ இருபது நிமிடங்களுக்குள் முழு இடத்துக்கும் பரவியது. வெளியேறும் படிகள் தீப்பிடித்திருந்தமையாலும் பல்க்கணி இல்லாமையாலும் இவர்கள் தப்ப முடியவில்லை. ஏனைய 17பேரும் பல்க்கணி கூரை என்பவற்றில் பாய்ந்து தப்பினர்.

தப்பி வெளியே வந்தவர்கள் நலீமா குடும்பத்தினரைக் காப்பாற்றுமாறு

www.tamilarangam.net

பொலிசாரிடம் உதவி கேட்டபோது நெருப்பு எரிவதால் தம்மால் ஒன்றும் செய்ய இயலாது என அவர்கள் கூறியுள்ளனர்.

அதிகாலை 4.30 மணியளவில் நிகழ்ந்த இந்த விபத்தில் இறந்தவர்களது சடலங்கள் மறுநாள் பகல் 12 மணியளவில் மீட்கப்பட்டன. இந்தச் சம்பவத்தில் தீ ஏற்பட்டதற்கான காரணம் சரியாகத் தெரியாது எனப் பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் கூறியுள்ளபோதும் முன்பு நிகழ்ந்த நாஸித் தாக்குதல்களையும் இந்தச் சம்பவத்துடன் ஒப்பிடுகையில் இதுவும் நாஸிகளாலேயே செய்யப்பட்டது எனத் திட்டவட்டமாகத் தெரியவருகிறது.

முன்பு நிகழ்ந்த ஹொயஸ்வேடா தாக்குதல் சம்பவத்திற்குப் பிறகு அகதிகள் வெளிவாசல் கதவைப் பூட்டிவிட்டுப் பாதுகாப்பை உறுதி செய்துகொண்டு படுப்பதே வழக்கம். தற்போது நாஸிகளின் தாக்குதல்கள் குறைந்ததுபோல உணர்ந்ததால் அந்த வழமையை மொகைதீன் கைவிட்டிருந்தார். இதுவே தீயிடல் நிகழ வாய்ப்பளித்தது.

(இலங்கை பாசிச எதிர்ப்புக் குழுவினரின் பிரசுரம் ஒன்றிலிருந்து இத்தகவல்கள் பெறப்பட்டவை)

---

## 21ம் நூற்றாண்டில் உலகம்

*ஒவ்வொரு தேசத்திலும், ஒவ்வொரு காலத்தில் வெவ்வேறு இனத்தவர்கள் தாமே மேலானவர்கள் என்ற இனவெறிப் பிரசாரங்களில் ஈடுபட்டு வந்துள்ளனர். இதன் உள்நோக்கம் ஏனைய உள்நாட்டுப் பிரச்சனைகளில் இருந்து மக்களைத் திசைதிருப்புவதும், இதன்மூலம் சிலர் தமது நலன்களைப் பேணுவதுமாகும். கடந்த சில வருடங்களாக ஐரோப்பாவில் நிறவெறியும், வெள்ளையின உயர் உணர்வும் வேகமாக வளர்ந்துவருவதை நாம் கண்ணால் காண்கிறோம். இன்று மேற்கு நாடுகளில் உள்ள மந்தப் பொருளாதார நிலையினால் இந்த உணர்வு கூடிவருகிறது.*

*இதோ, இந்தப் படத்தில் ஸ்பெயின் நாட்டு நிறவெறியர்கள், தீவிர வலதுசாரிகள், பாசிஸ்டுகள் ஆயிரம் பேர் 16வருடம் முன்னர் காலமான சர்வாதிகாரி பிரான்சிஸ்கோ ஃபிராங்கோவின் நினைவு நாளில் ஒன்றுகூடித் தமது பாசிச வெளிப்பாட்டைக் காட்டினர். இந்தத் தினத்தில் ஜேர்மனி, இத்தாலி, பிரான்ஸ் நாட்டுத் தீவிரவாதிகளும் சென்று கலந்துகொண்டனர். 21ம் நூற்றாண்டை நோக்கி உலகம் நகர்வதாகப் பலரும் நகைச்சுவையோடு குறிப்பிடுகின்றனர்.* ●

## தேடல்

*அரசியலை முதன்மைப்படுத்தும்*
*இருமாத இதழ்*
*566,* **Parliament St,**
**Toronto, Ont**
**M4X IP8**
**Canada**

* சுவடுகள் பற்றிய உங்களது அபிப்பிராயங்களை அறிய விரும்புகிறோம். சுவடுகள் பற்றிய உங்கள் அபிப்பிராயங்களைத் தயங்காமல் எழுதவும்

* சுவடுகள் வாசகர்களிடம் இருந்தும், படைப்பாளிகளிடம் இருந்தும் தரமான ஆக்கங்களை எதிர்பார்க்கிறது. ஆக்கங்கள் படைப்பிலக்கியங்களாகவோ கட்டுரை, விமர்சனம் போன்ற துறைகளிலோ அமைந்திருக்கலாம்.

● சுவடுகள்

www.tamilarangam.net

# சுவடுகள்

இன்னும் ஒருதரம் பேச்சுவார்த்தைக் காற்றை யுத்தப் புயல் மேவியிருக்கிறது. பல தடைகள் ஏற்படலாம் எனினும் பேச்சுவார்த்தைக்கான ஒரு சூழல் கனிந்து வருவதாகவே தெரிந்தது. ஆனால் தமிழ் மக்களது பிரச்சனைகள்பற்றிப் பேசுவது அவசியமற்றது என்ற அரசின் கொள்கையை வெளிக்காட்டுவது போலப் பேச்சுகள் தொடங்கமுதலே நிறுத்தப்பட்டு, வடக்கில் மீண்டும் ஒரு யுத்த நடவடிக்கை தொடங்கிவிட்டது.

தற்போது முயற்சி எடுக்கப்பட்ட பேச்சுகள், அமைச்சர் தொண்டமானின் தனிப்பட்ட முயற்சியாகவே தொடங்கின அல்லது காட்டப்பட்டன. அரசுக்கு இதில் உடன்பாடு உண்டா இல்லையா என்பதை அரசு தெளிவாக்கவில்லை. பேச்சுகளுக்கான திட்டம் சிங்கள பௌத்த இனவாதிகளால் கடுமையாகச் சாடப்பட்டு பேச்சோ அமைதியோ இல்லாமல் நாட்டை யுத்தமேகமே தொடர்ந்தும் சூழ்கிறது.

இலங்கையின் வரலாற்றில் பௌத்தமதம் ஒரு அரசியல் நிறுவனமாக வளரத் தொடங்கியது ஆங்கிலேயர் காலத்திலேயே என்றாலும் அதற்குச் சிறப்புரிமைகளும் தனித்துவமும் கிடைத்தது 1948க்குப் பிந்திய காலங்களிலேயே எனலாம். அதுவும் அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் இந்தச் சிறப்புரிமைகள் பாதுகாக்கப்பட்டது 1972இல் கொண்டுவரப்பட்ட புதிய அரசியலமைப்புச் சட்டம் மூலமே. இந்தச் சட்டம் அறிமுகமாகி நடைமுறைக்கு வந்ததில், பாராளுமன்ற இடதுசாரிகள் வகித்த பங்கு மிகப்பெரியது. முக்கியமான சகல சிங்களக் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து ஏனைய மதத்தினரின் முதுகில் குத்தியதை மறந்துவிட முடியாது.

இலங்கையில் தற்போது இயங்கிவரும் முக்கிய அரசியல் அமைப்புகளையும், கட்சிகளையும் அவதானிக்கும் ஒருவர், அவற்றின் அமைப்பு முறையை ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வொன்றும் பௌத்தமத நிறுவனங்களின் ஆதிக்கத்தின் கீழேயே தங்கியிருப்பதைக் காணமுடியும். தற்போதைய ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்க பௌத்த குருமார் சபை, சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான பிரிவுகள் பௌத்த நிறுவனங்களுடன் அமைப்பாகியிருப்பமை என்பன சில உதாரணங்கள்.

இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு எனவும், ஏனைய இன மத மொழிக் குழுக்கள் அனைத்தும் இதனை 'அனுசரித்துப்' போகவேண்டும் எனவும், பௌத்த சிங்கள உணர்வுடைய அரசால் தானாக சலுகைகள் ஏதாவது வழங்கப்பட்டாலன்றி எந்த உரிமைகளுக்காகவும் ஏனைய இனங்கள் பேசக்கூடாது எனவும் எண்ணுகிற போக்குடைய பௌத்த சிங்களப் பேரினவாதம் எத்தகைய தீர்வை எமக்குத் தரலாம்?

www.tamilarangam.net

சிங்கள மக்களிடையே ஏனைய இன மக்களைப் பற்றிய சரியான சிந்தனை உடைய பலர் தோன்றினாலும் இவர்களால் சிங்கள பௌத்த பேரினவாத அலையிலிருந்து தமது மக்களைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது. இது கடந்த காலத்தின் கசப்பான வரலாறு.

ஏனைய இன மக்களையும் இலங்கை மக்களாக அங்கீகரிப்பதிலும், அவர்களது சகல அரசியல் உரிமைகளையும் எந்தவித விவாதத்திற்கும் அப்பாற்பட்டு அங்கீகரிப்பதிலும்தான் இலங்கையை ஒரு நாடாகக் காப்பாற்றும் சாத்தியம் இருக்கிறது என்பதை இந்தப் பேரினவாதிகளால் உணரமுடிவதில்லை. பதிலாக சகல வழிகளிலுமான ஒடுக்குமுறைகளைப் பிரயோகித்து இனங்களை வலுக்கட்டாயமாக இணைக்கலாம் என்ற அபத்தமான கொள்கையை நம்புகின்றனர். பலவந்தமாக இணைந்து வாழ நிர்ப்பந்தம் செய்யப்பட்ட பல சிறுபான்மை இனங்கள் இன்று தத்தமது வழிகளைத் தேர்ந்துவிட்டதை ஏன் இவர்கள் ஏன் உணரமறுக்கிறார்கள்?

ஒடுக்குமுறைகளும் திட்டமிட்ட வன்முறைகளும் இன அழிப்பும், இவர்களே நம்புவதாகக் கூறும் பௌத்த நெறியல்ல. பயங்கரவாதம் என்று இவர்களால் கூறப்படும் போராட்டம் தோன்றவும் தொடரவும் இவையே காரணமாக அமைந்தன என்பதை இப்போதாவது இவர்கள் உணரமுடியுமாயின் அதன்பின் நாட்டில் இரத்த ஆறு ஓடாது என்பது உறுதி.

இலங்கை ஒரு நாடாக இருக்கவேண்டும் என யாராவது பெரும்பான்மை இனத்தவர் விரும்பினால், அவர்கள் செய்யவேண்டியதெல்லாம் பௌத்த மதவெறியை மதநெறியாக்கி - சிங்கள பௌத்த இனவாதத்தை அமைப்பு வடிவத்தில் இருந்து நிர்மூலமாக்கி, ஒவ்வொரு பௌத்த சிங்களக் குடிமகனுக்கும் உள்ள அதே உரிமைகளை ஏனைய இன மக்களும் பெறும் விதத்தில் அரசியல்அமைப்பை மாற்றியமைப்பதுதான். தற்போதைய வழியிலேயே அரசும், பெரும்பான்மை எதிர்க்கட்சிகளும் சிங்கள பௌத்த இனவாதத்தை முதன்மைப்படுத்திக் கொண்டிருந்தால், இலங்கை ஒரே நாடாக இருக்காது.

அரசமரம் காணும் இடமெல்லாம் புத்தர் சிலை வைப்பதால் ஆயிரம் பௌத்த வழிபாட்டிடங்களை உருவாக்கலாம், ஐக்கிய இலங்கையை அதனால் உருவாக்க முடியாது.

சுவடுகள் 33
மாசி 1992

'Suvadukal'- Herslebsgate 43, 0578 Oslo 5, Norway

சுவடுகள்

www.tamilarangam.net



விவரணன்

# நோர்வேயில் அகதிகள் படும் பாடு



ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாகத் தஞ்சமடைந்த பல மூன்றாம் உலக நாட்டவர்களுக்கு பலவித கசப்பான அனுபவங்கள் கிடைத்துள்ளன. ஜேர்மன் பிரான்ஸ் பிரிட்டன் போன்ற நாடுகளில் பலர் கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. ஆனால் நோர்வேயில் வசிக்கும் பலஸ்தீன அகதிகள் பலருக்கு மிக வித்தியாசமான அனுபவம் கிடைத்துள்ளன. பாலஸ்தீன விடுதலை அமைப்பைச் (PLO) சேர்ந்த அகதிகள் நூற்றுக்கு மேற்பட்டோருக்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த வருடம் யூன் மாதமளவில் நோர்வேயின் பிரபல பத்திரிகையான 'ஆப்தன் பூஸ்தன்' வெளியிட்ட செய்தி இன்னாட்டு மக்களுக்கு மட்டுமன்றி அரசுக்கும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. அல்ஜீரியாவில் இருந்து தப்பி நோர்வேக்கு அகதிகளாக வந்த பலஸ்தீன அகதிகள் நூற்றுக் கணக்கானோர். இவர்களை இஸ்ரேலிய உளவு நிறுவனமா மொசாட் பயன்படுத்தியது என்பதும், அதற்கு நோர்வேஜியப் பொலிசார் ஒத்துழைத்தார்கள் என்பதும்தான் அந்தச் செய்தி. அகதிகள் விசாரணை செய்யப்படும்போது மொழிபெயர்ப்பாளர்களாக மொசாட் அதிகாரிகள் பயன்படுத்தப் பட்டிருந்தனர்.

இந்தச் செய்தி நோர்வே அரசியல் மட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. நீதியமைச்சர் காறி யெஸ்றபி பதவிவிலகவேண்டும் எனப் பரவலாக கோரிக்கை எழுந்துவருகிறது. நோர்வேயின் மற்றொரு பிரபல பத்திரிகையான 'டாக்பிளா(த)' மற்றும் தேசியத் தொலைக்காட்சிச் செய்திப் பிரிவு என்பன பொலிசாரதும், நீதியமைச்சு அதிகாரிகளதும் ஊழலையும் அதிகார துஷ்பிரயோகங்களையும் தொடர்ந்து அம்பலப்படுத்தின.

இதற்குப் பின்னர் சற்றுப் புத்திசாலித்தனமாகச் செயற்பட்ட நீதியமைச்சர், இதற்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி பதவிவிலத்தப்பட வேண்டும் எனவும், இது தொடர்பான அதிகாரிகள் பதவிமாற்றப்பட வேண்டும் எனவும் கூறினார். நாட்டின் நலன் கருதியும், பயங்கரவாத செயல்கள் நாட்டில்

www.tamilarangam.net

இடம்பெறக்கூடாது எனவும் தான் கருதியதாலேயே ப.வி.இ. பற்றியும், அப்பிராந்தியத்தில் நன்கு பரிச்சயம் உள்ள மொசாட் உளவாளிகளைப் பயன்படுத்தியதாக நொண்டிச் சாட்டுக் கூறிய பொலிஸ் அதிகாரி பதவிவிலகினார். விடயம் இத்துடன் முற்றுப் பெறவில்லை. பெப்ரவரி 15ஆம் திகதி தேசியத் தொலைக்காட்சிச் செய்தியில் இந்த மொசாட் அதிகாரிகளுக்கு நோர்வே நாட்டுக் கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டது என்ற செய்தி வெளியாகியது.

அடுத்துவந்த இரு நாட்களில் இதுபற்றிப் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க நீதியமைச்சர் மறுத்துவிட்டார். இது தொடர்பாக நீதியமைச்சுக் குழுவில் பதிலளித்த நீதியமைச்சர், இவ்வாறு மொசாட் உளவாளிகளுக்கு கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டது உண்மை எனவும், அஸ்கர், (b)பாரும் பொலிஸ் நிலையங்களிலேயே இவ்வாறு வழங்கப்பட்டது எனவும் இதற்குப் பொறுப்பான அதிகாரிகள் பதவிவிலகவேண்டும் எனவும் கூறினார்.

இந்த விடயங்கள் பற்றிக் கருத்துத் தெரிவித்த ஒஸ்லோவைச் சேர்ந்த பலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதி ஒருவர் மொசாட் உளவாளிகள் தம்மை நோர்வேஜியக் கடவுச்சீட்டுகளைக் காண்பித்துத் தம்மை அடையாளப் படுத்தியதாகவும், மிகவும் சரளமாக அரபிய மொழி பேசிய அவர்களது கேள்விகள் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் ராணுவ ரகசியங்களை மையமாகக் கொண்டிருந்தன என்றும் கூறியுள்ளார்.

மொசாட் உளவாளிகளால் விசாரிக்கப்பட்ட இரு பலஸ்தீனர்கள், விசாரணையின்போது பலஸ்தீன விடுதலை இயக்கம் பற்றிய தகவல்களைத் தந்தால் பெரும்தொகைப் பணம் தருவதாக அதிகாரிகள் கூறியதாகவும், மிரட்டும் பாணியில் விசாரணை நடத்தப் பட்டதாகவும், சரியான பதில் தரப்படாத பட்சத்தில் நாடு கடத்தப் படுவர் என அச்சுறுத்தப் பட்டதாகவும் தெரிவித்துள்ளனர். ஓர் அகதியின் உயிருக்குப் பங்கம் ஏற்படும் விதத்தில் நடந்துகொண்ட பொலிசார்மீது விசாரணை நடத்தப்படவேண்டும் எனப் பல எதிர்க்கட்சிகள் பலவும் கோரிக்கை விடுத்துள்ளன.



** உலகில் தற்போது ஏறத்தாழ ஒன்றரைக் கோடி அகதிகள் உள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது. இவர்களில் பாதிப்பேர் சிறுவர்கள்.*

இன்று பலஸ்தீனர்களுக்கு நடந்த கதி நாளை நமக்கும் நடக்கலாம். இன்று பலஸ்தீனர்கள் உலகில், முக்கியமாக மேற்குலகில் பயங்கரவாதிகளாகச் சித்தரிக்கப்படுகிறார்கள். இதே நிலை நமக்கும் ஏற்பட அதிக நேரம் செல்லாது. அவ்வாறான நிலையில் எமக்கு எதுவித பாதுகாப்பும் இல்லாமல் இருப்பதைக் காட்டிலும், எம்மை அமைப்பாக்கிப் பாதுகாத்துக் கொள்வது அவசியம்.

www.tamilarangam.net

# இலங்கை அரசின் இன்னொரு வியாபாரம்
## அமெரிக்காவுக்கு வானொலி அஞ்சல் நிலையம்

அமெரிக்காவுக்கும் தற்போதைய இலங்கை அரசுக்கும் உள்ள உறவுகள் புதியவையல்ல. இலங்கையை முக்கிய இடமாகக் கொண்ட இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் நலன்பேணும் அரசு ஒன்று இருத்தல் அவசியம் என்ற அமெரிக்காவின் நோக்கை கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாக இலங்கையின் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி தன்னாலான வழிகளில் முயன்று நிறைவேற்றிவருகிறது. ஐக்கிய தேசியக் கட்சி மிக அண்மையில் இலங்கையில் அமெரிக்காவுக்காகத் திறந்துவிட்ட கதவு, அமெரிக்காவின் உத்தியோகபூர்வ வானொலியான 'வொய்ஸ் ஒஃப் அமெரிக்கா'வின் (VOA) அஞ்சல் நிலையம் ஒன்றைத் திறக்க இலங்கையில் இடமளித்ததாகும்.

இவ்வாறான ஒரு அஞ்சல் நிலையம் திறக்க நீண்டகாலமாக அமெரிக்கா முயன்றிருக்கிறது. ஏற்கனவே அவ்வாறான ஒரு அஞ்சல் நிலையம் கொழும்பின் அருகே இருந்தாலும் அது சக்தி குறைவானது என்ற காரணத்தால் புதிய அஞ்சல் நிலையத்தைத் திறந்து அதன்மூலம் தனது ஆசிய ஒலிபரப்புகளைப் பரவலாகக் கேட்கும் நிலையை உருவாக்க அமெரிக்கா விரும்புகிறது. இதற்கான முயற்சி முன்பே தொடங்கப் பட்டாலும், இந்தியா அதை நீண்டகாலமாகத் தடுத்தே வந்திருக்கிறது. இந்தியாவின் எதிர்ப்பைச் சம்பாதித்தபடியே, இலங்கை அவ்வாறான ஒரு அஞ்சல் நிலையத்தைத் திறக்க விரும்பவில்லை அல்லது முடியவில்லை.

இதற்கு முக்கிய காரணம் அவ்வாறான ஒரு அஞ்சல் நிலையம் இந்தியாவுக்கு எதிரான அல்லது ஒரு யுத்த சூழலில் ராணுவ தகவல் பரிமாற்றத்துக்குப் பயன்படலாம் என இந்தியா அஞ்சியதே.

இந்தியா அஞ்சல் நிலையம் தொடர்பாகக் கொண்டிருந்த பயமே, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் இவ்வாறான ஒரு அஞ்சல் நிலையம் அமைந்தால் அது ராணுவ நோக்கங்களுக்குப் பயன்படாது என



www.tamilarangam.net

இலங்கை உறுதி செய்யவேண்டும் என்று குறிப்பிடவைத்தது. ஆனால், இலங்கையின் வழியிலேயே இந்தியாவும் அமெரிக்க நலன்பேணி அதன்மூலம் தான் நலன்களை அடையலாம் எனத் தற்போது நம்புவதால் இலங்கை எதுவித பிரச்சனையுமின்றி அமெரிக்காவுடன் அஞ்சல் நிலையம் பற்றிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.

இலங்கை இவ்வாறு ஒரு இடத்தை அமெரிக்காவிற்கு அஞ்சல் நிலையமாகப் பயன்படுத்த வழங்கியதால் சில மில்லியன் டொலர்கள் உதவி அல்லது நன்கொடை என்ற பெயரில் இலங்கைக்குக் கிடைக்கும். நிர்மாணம் மற்றும் பராமரிப்புப் பணிகளில் சில இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். ஆனால் இதனால் எழக்கூடிய பிரச்சனைகள் பற்றி யாரும் அக்கறை கொண்டிருந்ததாகத் தெரியவில்லை.

பிலிப்பைன்ஸில் அமெரிக்காவின் படைத்தளங்கள் இருந்தமையால் கணிசமான அளவு வருமானம் பிலிப்பைன்ஸ் அரசுக்கு நேரடியாகக் கிடைத்தது. ஏராளமானோர் அந்தத் தளங்களில் வேலைவாய்ப்புகளையும் பெற்றிருந்தனர். ஆனால் இந்தத் தளங்களைச்சுற்றிய பகுதிகளில் விபச்சாரம், ஒழுக்கக் கேடுகள், சட்டவிரோத நடவடிக்கைகள், மது, போதைப் பொருட்கள், பாலியல் நோய்கள் என்பன சர்வசாதாரணமாக இருந்தன. அதைவிட பிலிப்பைன்ஸ் மக்களின் வாழ்க்கைமுறைக்கு இந்தப் புதிய தளங்கள் குழப்பமாக இருந்தன. கலாசாரம், ஒருவகையான சீரழிவுக் கலாசாரமாக வளரத் தொடங்கியது. இவ்வகையான காரணிகளால் பிலிப்பைன்ஸ் மக்களிடையே இந்தப் படைத்தளங்கள் பற்றிய அதிருப்தி வளர்ந்துவந்தது. இதுவே அமெரிக்கா கடைசியில் மூட்டை முடிச்சுகளோடு வெளியேறவேண்டிய ஒரு நிலையைத் தோற்றுவித்துள்ளது.

பிலிப்பைன்ஸ் உதாரணம் மிகவும் தெளிவாகக் கண்முன்னால் தெரிந்தபோதும் இலங்கை அரசு அதேமாதிரியான ஒரு நிலையை இலங்கையில் ஏற்படுத்த முனைகிறது. இதுபற்றிப் பரவலாக எதிர்ப்புணர்வுகள் பெரிதாக வளர்க்கப்படவில்லை. முக்கியமாக சில இடதுசாரி அமைப்புகள் தவிர இதன் அபாயம் பற்றி யாரும் கவலைப்படவில்லை. ஆனால் தற்போது இந்த அஞ்சல் நிலையம் அமையவுள்ள சிலாபம் - புத்தளம் பகுதி மக்கள் தமது பாரம்பரிய வாழிடங்களில் ஏற்படவுள்ள இந்த அபாயத்திற்கெதிராகப் போராடவுள்ளனர். இந்தப் பகுதிகளில் வாழும் மீனவ மக்களின் வாழ்க்கையை இங்கு அமைக்கப்படவுள்ள அஞ்சல் நிலையத்துடனான உல்லாசப் பிரயாணிகள் விடுதி பெரிதும் பாதிக்கும் என இந்தப்பகுதிக் கத்தோலிக்க மதகுருமார் பெரிதும் அச்சம் தெரிவித்துள்ளனர். சிலாபப் பகுதியைச் சேர்ந்த இரணவில என்னும் கிராமத்திலேயே அமெரிக்காவுக்கு அஞ்சல் நிலையத்துக்காக 413 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் இந்தப் பகுதியைச் சேர்ந்த 300க்கு மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் இடம்பெயரவேண்டி நேரலாம் என அஞ்சப்படுகிறது. ஆனால் தமக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் மக்கள் குடியிருக்கவில்லை என அமெரிக்கா செய்தித் தாபனம் கூறுகிறது.

மக்கள் வெளியேற்றப்பட வேண்டுமா இல்லையா என்பது ஒரு தெளிவற்ற தகவலாக இருக்க, அந்தப் பகுதி மக்கள் பலவந்தமாக வெளியேற்றப் பட்டாலன்றித் தாமாக வெளியேற மாட்டார்கள் என மதகுரு ஒருவர் கூறியுள்ளார்.

www.tamilarangam.net

## எறும்பும் நெருப்பும்

நாய் நரிகள் கொண்டு போனதும்
பேய்கள் கொண்டு போனதும் போக
சில எலும்புத் துண்டுகளும்
சில நெருப்புத் துண்டுகளும்
எஞ்சிக் கிடந்தன

இந்துமா கடலில்
புதைப்போம் என்றனர் சிலர்
அகழ்வாய்வாளருக்காக
நிலத்தடியில்
புதைப்போம் என்றனர் பலர்.

நான் சொன்னேன்
பவுத்திரமாய்ப் பாதுகாத்து
அடுத்த தலைமுறையின் கைகளில்
ஒப்படைப்போம் என்று.

இப்போ
இந்த சிலரும்
அந்த பலரும்
என்னைப் புதைக்கவேண்டுமென்றனர்.

ஒன்று மட்டும் புரிந்தது.
எங்கேயாவது
எதையாவது
புதைத்தலே இவர்களுக்குத் தெரிந்தவை

**பானுபாரதி**

இரணவில மக்கள், அமெரிக்க ஒலிபரப்பு அஞ்சல் நிலையம் தமது கிராமத்தில் நிறுவப்படக்கூடாது எனத் தொடர்ந்து போராடி வருகின்றனர். முதற்கட்டப் போராட்டமாக இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இரணவிலவில் உள்ள மரங்களில் சிலுவை அடையாளங்களைப் பொறித்து வருகின்றனர். இந்தப் போராட்டத்திற்குத் தக்க பலன் கிடையாவிடில் தம்மைத்தாமே சிலுவைகளில் அறையவிருப்பதாகவும் இப்பகுதிப் பிரஜைகள் கூறியுள்ளனர்.

கத்தோலிக்க மதகுருமார் பின்னணியில் இருப்பதால் ஏனைய போராட்டங்களை, ஆர்ப்பாட்டங்களை அடக்குவது போல இதில் 'கைவைக்க' அரசு முனையாது. அவ்வாறு முனையும் பட்சத்தில் இது ஒரு சிக்கலான பிரச்சனையாக உருவெடுக்க வாய்ப்புண்டு. தற்போதைய சூழலில் இரணவில மக்களுக்கு ஆதரவாக இலங்கை மக்கள் தமது எதிர்ப்புணர்வை அரசுக்குக் காட்டவேண்டும். அமெரிக்காவுடன் தன்னிச்சையாக இவ்வாறான ஒரு ஒப்பந்தத்தைச் செய்தது தவறு என அரசு உணரவேண்டும். இவ்வாறான போராட்டங்கள் உறுதியாக முன்னெடுக்கப்பட்டு வெற்றி பெற்றால்தான் இலங்கையில் எப்போதும் (தனக்கு) வசந்தகாலம் அல்ல என்பதை அமெரிக்கா உணரமுடியும்.

*வொய்ஸ் ஒஃப் அமெரிக்கா இரணவிலவில் அமைக்கவுள்ள புதிய அஞ்சல் நிலையம் 1995ஆம் ஆண்டில் இருந்து இயங்கத் தொடங்கும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை கட்டிட நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப் படவில்லை. இந்த அஞ்சல் நிலையம் 1000 மெகாவாற் சக்தி கொண்டதாக இருக்கும்.*

**அனந்தன் பிரகலாதன்**

www.tamilarangam.net




**நோர்வேவாழ் தமிழர்களுக்கு ஓர் நற்செய்தி!**
**உலகின் சகல பாகங்களுக்கும் மலிவான**
**விலையில் விமானச் சீட்டுகள்**
**மலிவான கட்டணங்கள்!**
**தரமான சேவை!!**

*எமது முகவரியில் நேரிலோ, தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்ளுங்கள்*

FLOWRIDA TRAVELS
Osterhaus Gt21E
0187 Oslo 1
*தொலைபேசி: 02/114941*
*02/363365*

www.tamilarangam.net



தேசிங்குராஜன்

# தொலைந்துபோன நாட்கள் பற்றிச் சில குறிப்புகள்

பல கசப்பான பாடங்களைக் கற்றுக்கொண்டபின்பும் தென்னிலங்கை அரசியல்வாதிகளும் இனவாத அமைப்புகளும் இனப்பிரச்சனை தொடர்பாக தமது நிலைப்பாடுகளை மாற்றிக்கொள்ளவில்லை என்பதும், ராணுவத் தீர்விலேயே நம்பிக்கை கொண்டுள்ளனர் என்பதும் மீண்டும் அரசு யுத்தத்தைத் தொடர்வதில் இருந்து தெளிவாகிறது.

தென்னிலங்கையின் 'இனவாத அரசியல் கொந்தளிப்புகளை' அடுத்து, அமைச்சர் தொண்டமானின் யாழ்ப்பாண விஜயம் ரத்தானதுடன் சமாதானத்திற்கான கதவுகள் மூடப்பட்டுள்ளன. தொண்டமானின் 'தீர்வுத் திட்டங்கள்' பற்றிப் பெரும் சர்ச்சையும் எதிர்ப்புகளும் அரச, எதிர்க் கட்சிகளிடையே தோன்றியுள்ளன. தீவிர பௌத்த அமைப்புகள் இந்தத் திட்டத்துக்குத் தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காத, பாதுகாப்பை உறுதிப்படுத்தாத இவ்வாறான அரைகுறைத் தீர்வுத் திட்டங்களுக்கே எதிர்ப்புக் கிளம்பும் பட்சத்தில் இனப்பிரச்சனைக்குச் சமாதானத் தீர்வு சாத்தியமா என்ற கேள்வி பரவலாக எழுந்துள்ளது.

தொண்டமான் புலிகளுடன் பேச்சு நடத்தும் பட்சத்தில் அவரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கவேண்டும் என்று நாட்டில் பரவலாக அபிப்பிராயம் எழுந்துள்ள அதேவேளை தீர்வுத்திட்டங்களைப் பகிரங்கப் படுத்தியதற்காக தொண்டமானை சபாநாயகர் (இவரைப் பகாநாயகர் என்றும் அழைப்பதுண்டு) முஹமது கண்டித்துள்ளார். தொண்டமானின் செயல் பாராளுமன்றத்தையும், இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக் குழுவையும் அவமதிப்பதாக உள்ளது என அவர் கூறியுள்ளார். இதுபற்றிப் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்ஹ, பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தீர்மானங்களுக்கு அமையவே இனப்பிரச்சனைத் தீர்வுத்

www.tamilarangam.net

திட்டங்கள் மேற்கொள்ளப்படும் எனக் கூறியுள்ளார்.

சுதந்திரக் கட்சியின் உதவிச் செயலாளர் தர்மசிறி, தொண்டாவின் தீர்வுகள் தமது கட்சிக்கு உடன்பாடற்றவை எனக் கூறியுள்ளார். இக்கட்சியைச் சேர்ந்த நாற்பது பாராளுமன்ற உறுப்பினர்களால் 'ஹெல உருமய' (சிங்கள இனவாதம்) என்ற இனவாத அமைப்பு உருவாக்கப்பட்டு இனவாத அறிக்கைகள் கருத்துகள் வெளியிடப் படுகின்றன. கட்சியின் பிரதான சர்ச்சைக்குரிய நபரான கம்பஹா பா.உ எஸ்.டி.பண்டாரநாயகா தலைமையில் இயங்கும் இந்தக் குழு கட்சியில் ரத்வத்தை குடும்ப ஆதிக்கத்தையும் எதிர்த்து

மறைமுக வேலைகள் செய்வதால் கட்சி பிளவை நோக்கிச் செல்வதென்னவோ உண்மைதான். இவ்வமைப்பைக் கலைத்துவிடுவதாக கட்சிச் செயற்குழு தீர்மானித்துள்ளது.


மன்னார் நானாட்டான் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட தளத்தில் இருந்து சென்ற ராணுவத்தினருக்கும் புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் ஒரு அதிகாரி உட்பட ஒன்பது ராணுவத்தினரும் பதினைந்து புலிகளும் கொல்லப்பட்டதாக அரசு அறிவித்துள்ளது. திருமலை சீனன்குடா விமானப்படைத் தளத்தில் ஏற்பட்ட வெடிகுண்டு விபத்தில் 30 விமானப்படையினர் இறந்ததுடன் 11பேரைக் காணவில்லை எனவும் அரசு அறிவித்துள்ளது. 96 படையினர் கடும் காயமுற்றதாகவும் அறியப்படுகிறது. விபத்தில் ஒரு ஹெலி முற்றாகச் சேதமானதுடன், நான்கு பயிற்சி விமானங்கள் கடும் சேதமடைந்துள்ளன. பாரிய ஆயுதக் கிடங்கொன்றும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்ட பொருட் சேதங்கள் மட்டும் 50கோடி ரூபா என இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். இதே தினத்தன்று குச்சவெளி காட்டுப்பாதைத் தாக்குதல் ஒன்றில் 20 படையினர் பலியாகியதாக புலிகளின் செய்தியொன்று கூறுகிறது.

கடந்த சில மாதங்களாகக் கிழக்கு மாகாணத்தில் புலிகளின் கெரில்லாத் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. குறுகிய காலத்தில் 40 ராணுவத்தினருக்குமேல் பலியாகியுள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர். இதையடுத்து வெவ்வேறு பெயர்களுடன் ஐந்து தாக்குதற் திட்டங்களை அரசு ஆரம்பித்துள்ளது. கந்தகெதர இராணுவ நடவடிக்கையின்போது புலிகளின் தொப்பிகல முகாம் அழிக்கப்பட்டதாகவும் நான்கு புலிகள் பலியானதுடன் பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன என அரசு கூறியுள்ளது.

பொலனறுவை மாவட்டத்தில் உள்ள புனானையில் அரசபடையினர் நிகழ்த்திய தேடுதலில், முன்னர் காணாமல் போன முத்துலெப்பை (25) என்பவரது சடலம் சூட்டுக் காயங்களுடன் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. அம்பாறை மாவட்ட புனானையில் நிகழ்ந்த மோதலில் இரு தரப்பிலும் ஒவ்வொருவர் கொல்லப் பட்டுள்ளதாக அறியப்படுகிறது. இதேவேளை மட்டக்களப்பு வாவியில் மீன்பிடிக்க ராணுவம் தடைவிதித்துள்ளதுடன் இந்தப் பிராந்தியத்தில் ஊர்காவல் படையினரின் தாக்குதலும் அதிகரித்துள்ளது. சுற்றிவளைப்பிலும் தேடுதலிலும் பல மக்கள் கைதாவதும் அவர்களில் சிலர் மாயமாக மறைந்துபோவதும் கிழக்கில் வழமையான சம்பவங்களாகி வருகின்றன.

தமிழக அரசின் நெருக்கடியால் இலங்கை திரும்பும் அகதிகளில் ஐந்து தொகுதியினர் இதுவரை நாடு திரும்பியுள்ளனர். முதலாவது தொகுதியினரை ஏற்றிவந்த அக்பர் என்ற கப்பல் இலங்கைக் கடற்படைக் கப்பலான கங்காதேவி என்ற கப்பலின் துணையுடன்

www.tamilarangam.net



www.tamilarangam.net




திருமலைவந்து சேர்ந்தபோது அகதிகள் புனர்வாழ்வு அமைச்சர், கூட்டுப்படைத் தளபதி ஆகியோர் வரவேற்றதுடன் அகதிகளைப் 'பராமரிக்கும்' பொறுப்பையும் ஏற்றுக் கொண்டனர். ஆயினும் நாடு திரும்பிய அகதிகளில் பலர் பராமரிப்போ பாதுகாப்போ இன்றி அவலமுறுகின்றனர். எனினும் இந்தியாவில் இருந்து அகதிகளைத் திருப்பியனுப்பும் நடவடிக்கைகள் தொடர்கின்றன.

இதேசமயம் பதுளை பசறை நோர்வுட் தோட்டங்கள் உட்பட மலையகத்தின் பல பகுதிகளில் இரகசியப் பொலிசார் இளைஞர்களையும் யுவதிகளையும் கைது செய்துவருகின்றனர். இலக்கத் தகடற்ற வாகனங்களில் வரும் இவர்கள் முன்பு ஜேவிபியை அடக்க அரசு எடுத்த அதே நடவடிக்கைப் பாணியில் மலையகத்திலும் தொடர்கின்றனர். இவர்களால் கைதான 53 மலையக இளைஞர்களில் 41பேர் பூஸா முகாமிற்கு அனுப்பப் பட்டுள்ளனர்.

பரிஸில் கூடிய இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் இலங்கையரசின் தொடர்ந்த மனித உரிமை மீறல்களுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளது. எனினும் நடைமுறையில் உள்ள நிதியாண்டுக்கு 83.5லட்சம் டொலர்களை வழங்கத் தீர்மானித்துள்ளது. இலங்கைக்கு ஆயுதவழங்கல் கட்டுப்பாட்டைப் பிரிட்டன் நீக்கிவிட்டதாக பாதுகாப்பு அமைச்சின் பதில் செயலாளர் கூறியதை பிரிட்டன் மறுத்துள்ளது. எனினும் துருப்புகளை இடம்மாற்றும் அவ்ரோ விமானம் ஒன்றை பிரிட்டனில் இருந்து இலங்கை வாங்கியுள்ளது.

அண்மையில் இலங்கை விஜயம் செய்த கனேடிய மனித உரிமைகள் குழு படைத் தளபதிகள், கிழக்குப் பிராந்தியப் புலிகள், பௌத்த மதகுருமார் என்போரைச் சந்தித்துப் பேசியபின், கனடா திரும்பி வெளியிட்ட அறிக்கையில் இலங்கையில் மிக மோசமாக மனித உரிமைகள் மீறப்படுவதாகவும், பெருந்தொகையில் மக்கள் கொல்லப் படுவதாகவும் கூறியுள்ளதுடன் இலங்கைக்கான ஆயுத ஏற்றுமதியை நிறுத்தும்படி உலக நாடுகளைக் கோரியுள்ளது. அரசும் விடுதலைப் புலிகளும் சர்வதேச மத்தியஸ்தத்துடன் பேச்சு நடத்தவேண்டும் எனவும் அக்குழு கூறியுள்ளது.

இவை ஒருபுறமிருக்க வடக்கு மீதான தாக்குதலுக்கு சகல முஸ்தீபுகளையும் அரசு



S IYUNIN

செய்துள்ளது. குடாநாட்டை ஆக்கிரமிக்கும் தாக்குதல் எந்த நேரமும் ஆரம்பிக்கலாம் என அஞ்சப்படுகிறது. இனாணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் மக்களைக் குடியேறுமாறு கூட்டுப்படைத் தளபதி ஹமில்டன் வணசிங்க கூறியுள்ளார். குடாநாட்டின் மீதான தாக்குதல் எந்த நேரமும் ஆரம்பிக்கலாம் என கேணல் முனசிங்ஹா கூறியுள்ள அதேவேளை பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு படை அதிகாரி, இந்தத் தாக்குதல் 1987இல் நிகழ்ந்த வடமராட்சித் தாக்குதலைவிட அதிக சேதம் விளைவிப்பதாக இருக்கும் எனக் கூறியுள்ளார். இராணுவ ரீதியில் சற்று நலிவுற்றிருக்கும் புலிகள் தற்போது பேச்சுவார்த்தை ஒன்றையே விரும்புகின்றனர். கிழக்கின் பெரும்

www.tamilarangam.net

பகுதியும் முல்லைத்தீவு வவுனியா மன்னார்ப் பகுதிகளின் கேந்திர நிலைகளும் அரச படையினர்வசம் வீழ்ந்த நிலையில் சிங்களக் குடியேற்றங்களும் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. தவிரவும் ராஜீவ் கொலையையடுத்து சர்வதேச ரீதியாக ஏற்பட்டுவரும் நெருக்குதல்களும் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுவரும் அதிருப்தியும் புலிகளுக்குச் சாதகமாக இல்லை.

அண்மையில் தீவிர சிங்கள இனவாதப் பத்திரிகையான ஐலண்ட் பத்திரிகைக்குப் பேட்டியளித்த பிரபாகரன் இலங்கைப் பிரச்சனையில் ஐ.நா. தலையிட்டு அமைதித் தீர்வுக்கு வழிவகுக்கவேண்டும் எனக் கூறியுள்ளார். இந்தியாவை விலக்கிவைத்துவிட்டு சர்வதேச மத்தியஸ்தத்தையே அரசும் புலிகளும் விரும்பினாலும் பிராந்தியப் பூகோள அமைப்பும், பிராந்தியத்தில் இந்தியாவின் மேலாதிக்கமும் இதற்குத் தடையாயுள்ளன. இந்த நிலையில் மத்தியகிழக்கு அமைதிக்கான பேச்சுகளில் இந்தியா பங்கேற்க வேண்டும் என்று யசிர் அரபாத் விடுத்துள்ள வேண்டுகோள் இந்தியாவின் முக்கியம் சர்வதேச ரீதியில் இந்தியாவின் முக்கியத்துவம் அதிகரிப்பதையே காட்டுகின்றன.

அண்மையில் கத்தோலிக்கத் துறவற சபைகள் குழுவொன்று யாழ் சென்று புலிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தையை அடுத்து வெளியிட்ட அறிக்கையில் யாழ் மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்குவதாகவும், ஏற்படவுள்ள ராணுவத் தாக்குதலை மிக்க பயத்துடன் எதிர்நோக்குவதாகவும் குறிப்பிட்டுள்ளனர். கொழும்பு அதிமேற்றிராணியார் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னான்டோ வெளியிட்ட அறிக்கையில் இனப்பிரச்சனையைத் தீர்க்க சமஷ்டி முறையை அரசு கையாளவேண்டும் எனக் கூறியுள்ளார்.

* புலிகளின் தளபதி பிரபாகரனையும், பிரதான உறுப்பினர்களில் ஒருவரான பொட்டு அம்மானையும் 'தடா' சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட விசேட நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு, நீதிமன்றம் கொடுத்த விளம்பரம் படங்களுடன் இலங்கைப் பத்திரிகைகளில் வெளியாகியுள்ளது.

* கொக்கட்டிச்சோலைப் படுகொலைச் சம்பவங்களுக்கு இராணுவமே பொறுப்பு என விசேட ஜனாதிபதி ஆணைக்குழு தீர்ப்பளித்துள்ளது.

* இந்திய சமாதானப் படையினரால் 8,000 பொதுமக்கள் படுகொலைச் சம்பவங்கள் பற்றி, இந்தியாவுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவுள்ளதாக அன்ரன் பாலசிங்கம் அறிவித்துள்ளார்.

* வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பாக சர்வசன வாக்கெடுப்பு ஒகஸ்ட் மாதம் 28ம் திகதி நிகழவுள்ளது.

* தாண்டிக்குளம், உடுவில், சுன்னாகம் பகுதிகளில் இருந்த கடைசி முஸ்லிம்களையும் புலிகள் வெளியேற்றியுள்ளனர். இவர்கள் உடுத்த துணியுடன் வவுனியாவரை புலிகளினால் கொண்டுசெல்லப்பட்டுக் கைவிடப்பட்டனர்.

* பல ஆயிரம் அப்பாவிச் சிங்கள இளைஞர்களின் படுகொலைகளின் சூத்திரதாரியான பொலிஸ் அதிகாரி உடுகம்பொலவுக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

www.tamilarangam.net

கடந்த சில மாதங்களாகவே இந்தியாவா புலிகளா என்பதுதான் பிரேமதாசவின் சிந்தனையாக இருக்கிறது. இந்தியாவுடன் ஒத்துழைப்பது புலிகள் விடயத்தில் சாதகமான பலனையே தரும் என்றாலும், நீண்டகால அரசியல் நோக்கில் தனது நலனைப் பாதிக்கும் எனக் கருதுகிறார். தவிரவும் ஜேவிபியினருக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியதாக அமைந்துவிடக் கூடாது என்பதிலும் அவர் கவனமாகவே இருப்பதாகத் தோன்றுகிறது. மறுபுறத்தில் புலிகளுடன் பேசுவது சிங்கள பௌத்த தீவிரவாதிகளின் எதிர்ப்பைச் சம்பாதிக்கும் என்பதுடன் கணிசமானளவு விட்டுக் கொடுப்புகளையும் மேற்கொள்ள வேண்டிவரும் என்றதால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விடுதலைப் புலிகள் பலமிழந்த நிலையை எதிர்பார்த்திருந்தார் பிரேமா. ராஜீவ் கொலையும், மன்னிப்புச் சபை அறிக்கையும் புலிகளுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்திய நிலையில் புலிகளின் இராணுவ பலத்தைக் குறைத்துவிட்டு அரைகுறைத் தீர்வு ஒன்றைத் திணித்துவிடலாம் எனப் பிரேமா நம்புவதுபோல் தெரிகிறது.

புலிகள் இன்று பலத்த நெருக்கடிக்கு உள்ளாகியிருப்பது உண்மையே என்றாலும் இராணுவரீதியான வெற்றியைப் படைகள் ஈட்டுவது என்பது நடைமுறையில் சாத்தியமா என்பது பெரிய கேள்விக்குறியே. அவ்வாறே வெற்றி பெற்றாலும் அது குறுகியகால வெற்றியாக இருக்குமே தவிர நிரந்தரத் தீர்வு என அமையாது. ஏனெனில் சரியான அரசியல் தீர்வு காணப்படும்வரை புலிகளை மட்டுமல்ல, எந்தவொரு தீவிரவாத அமைப்பினதும் வளர்ச்சியை அரசால் தடுத்து நிறுத்தமுடியாது.●

* 'சிவில் ஃபோரும்' என்ற புதிய அமைப்பு இனப் பிரச்சனை தொடர்பாக ஆராயவும் அதற்கான தீர்வுகளைக் கண்டறியவும் எனத் தொடங்கப் பட்டுள்ளது. இந்த அமைப்பில் நீலன் திருச்செல்வம், சாணக அமரசிங்ஹ (லிபரல் கட்சித் தலைவர்), அஷ்ரப் (முஸ்லிம் கொங்கிரஸ் தலைவர்), ஒஸி அபேகுணசேகரா (சிறீலங்கா மக்கள் கட்சித் தலைவர்) ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இவ்வாறு ஒரு அமைப்பை உருவாக்கித்தான் தீர்வைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற அவசியமில்லை. எல்லோருக்கும் தெரிந்த தீர்வுதான். நடைமுறைப்படுத்தும் துணிச்சல்தான் யாருக்கும் இல்லை.

## வேசங்கள்

ஜாதியும்,
ஜாதகமும்
திருமணம் பற்றி
விதிகளில் தீர்மானிக்க

வியாபார
விற்பனைகளுடன்
தடல்புடலாய்!

அறியாத இருவர்
புதிதாய்
அறிமுகமாகிக் கொண்டனர்

தியாகியாய்
வேடம் போட
'பெண்'
அங்கே தயார்நிலையில்.

*கலிஸ்டா*
*20.04.91* ●

www.tamilarangam.net

அண்மையில் அல்பேட்வில்லவில் (பிரான்ஸ்) இடம்பெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் நோர்வே மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. ஜேர்மனி, பொதுநலத் தேசங்களின் ஒன்றியம் (பழைய சோவியத் யூனியன்) ஆகியவற்றுக்கு அடுத்த இடத்தை நோர்வே பெற்றுள்ளது.

நாற்பது லட்சம் மக்களை மாத்திரமே கொண்ட இந்தச் சிறிய நாட்டின் சாதனை பல நாடுகளை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. இதற்கு முன்னர் ஒரே தடவையில் ஆகக்கூடிய தங்கப் பதக்கங்களை (ஏழு) நோர்வே இரண்டு முறைகள் பெற்றது (1936, 1952 ஒஸ்லோ). முன்னர் பிரான்சில் நிகழ்ந்த இரண்டு குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளிலும் நோர்வே சிறப்பான வெற்றிகளை ஈட்டியிருந்தது. இவற்றில் முதலாவது குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் (1924) நோர்வே சகல போட்டிகளிலும் முதலாவது நாடாக அதிக பதக்கங்களைப் பெற்றது (4தங்கம், 7வெள்ளி 6வெண்கலம்). இதே சாதனையை மீண்டும் 1968இல் (6தங்கம், 6வெள்ளி 2வெண்கலம்) பெற்று முதன்மை நாடாகியது. குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் பெற்ற மொத்தப் பதக்கங்களில் நோர்வே மூன்றாம் இடத்தில் உள்ளது.

இந்த வருடம் நோர்வே ஏழு முதல் பத்துத் தங்கப் பதக்கங்களைப் பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. கடைசியில் ஒன்பது தங்கப் பதக்கங்களை நோர்வே வீரர்கள் தமதாக்கினர்.

இந்த வருடத்திற்கான குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் முதல் இடம்பெற்ற பத்து நாடுகளும் அவை பெற்ற புள்ளிகளும் கீழே உள்ளன. அடைப்புக் குறிக்குள் இருப்பவை முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள், மொத்தப் புள்ளிகள். ஜேர்மனி (10/10/6, 181), பொதுநலத் தேசங்களின் ஒன்றியம் (9/6/8, 163), நோர்வே (9/6/5, 139), ஒஸ்திரியா (6/7/8, 132.5), இத்தாலி (4/6/4, 104), அமெரிக்கா (5/4/2, 84.5), பிரான்ஸ் (3/5/1, 73), பின்லாந்து (3/1/3, 54), நெதர்லாந்து (1/1/2, 49.5), ஜப்பான் (1/2/4, 47.5) இவை தவிர சுவீடனும் சுவிற்சர்லாந்தும் தலா ஒரு தங்கப்பதக்கத்தைப் பெற்றன. வேறு நாடுகளுக்குத் தங்கப் பதக்கங்கள் கிடைக்கவில்லை.

1924 முதல் 1992வரை நிகழ்ந்த குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் அதிக பதக்கங்கள் பெற்ற பத்து நாடுகள் பின்வருமாறு



மஹிந்தன்

# ஒலிம்பிக்கில் நோர்வேயின் வெற்றிகள்!


www.tamilarangam.net

உள்ளன. இவற்றில் கடந்த (1988) ஒலிம்பிக் வரை தனித்தனியே போட்டியிட்ட மேற்கு, கிழக்கு ஜேர்மனிகள் ஒன்றாகக் கணிப்பிடப்பட்டுள்ளன. ஆயினும் கிழக்கு ஜேர்மனி தனியே 39 தங்கப் பதக்கங்களைப் பெற்றிருந்தது. சோவியத் யூனியன்/ பொதுநலத் தேசங்களின் ஒன்றியம் - 87/63/67, ஜேர்மனி - 74/72/64, நோர்வே - 63/64/58, அமெரிக்கா - 47/50/34, பின்லாந்து - 35/44/37, ஒஸ்திரியா - 34/45/40, சுவீடன் - 34/23/33, சுவிற்சர்லாந்து - 24/25/27, இத்தாலி - 18/16/13, பிரான்ஸ் - 16/15/17. இவை தவிர கனடா, நெதர்லாந்து, பிரிட்டன் ஆகியவை முறையே 15, 14, 6 தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ளன. வேறெந்த நாடுகளும் இரு தங்கப் பதக்கங்களுக்கு மேல் பெறவில்லை.

---

# பொங்காத பொங்கல்!

*த.சாந்தகுமார்*



தமிழ் நோர்வே இணைவுகூடத்தினர் நடத்திய பொங்கல் விழா கடந்த பெப்ரவரி முதல் தேதியன்று வழமையான காலதாமதத்துடன் ஆரம்பமாகியது. நிகழ்ச்சியை ஒழுங்குசெய்தவர்களின் திட்டமிடாத செயல்பாடுகள் காரணமாக மாலை ஆறு மணிக்குத் தொடங்கவேண்டிய நிகழ்ச்சி ஏழரை மணியளவிலேயே தொடங்கியது. நிகழ்ச்சி ஆரம்பத்தில் பல்கேரிய நாட்டவர் ஒருவரது பியானோ வாசிக்க அதற்கேற்ற விதத்தில் வயலின் வாசித்த சாந்தி சச்சிதானந்தன் நோர்வே நாட்டவரின் நாட்டார் இசையை (Folke Musik) வயலினில் வாசித்துத் தனது திறமையை வெளிப்படுத்தினார்.

இதைபடுத்து நிகழ்ந்த கர்நாடக இசை நிகழ்ச்சியில் சங்கீதபூஷணம் திருமதி நாகராஜா பாட சாந்தி சச்சிதானந்தம் வயலின் வாசித்தார். மிருதங்கம் வாசித்துச் சிறப்பித்தவர் சிவகணேஷ். இந்த நிகழ்ச்சி சபையோரது பாராட்டைப் பெற்றாலும், நிகழ்ச்சியின் இடையில் ஒலிவாங்கிகள் ஒத்துழைக்காமையாலும் சற்று அதிக நேரம் நீடித்ததாலும் பார்வையாளர்களிடையே அதிருப்தி நிலவியது. சில பார்வையாளர்கள் கூச்சல் எழுப்பி ஏனைய பார்வையாளர்களையும் சங்கடப் படுத்தியமை வரவேற்கத்தக்க அம்சமல்ல. இது நிகழ்ச்சி ஒழுங்காக நடைபெறத் தடையாக இருந்தது.

இதையடுத்து நிகழ்ந்த சிறுமியின் நடனம் பார்வையாளர்களிடையே பாராட்டைப் பெற்றது. பலரும் நடனமாட முன்வராத சூழலில் இவ்வாறு ஒரு சிறுமி முன்வந்து ஆடியது பாராட்டத்தக்க அம்சமாக இருந்தது.

இதையடுத்து நிகழ்ந்த மெல்லிசை நிகழ்ச்சியில் ரவிக்குமார் இசையமைத்த சில பாடல்கள் இடம்பெற்றன. இவை பல சினிமாப் பாடல்களைவிடக் கேட்பதற்கு இனிமையாக இருந்தன. இப்படியான

www.tamilarangam.net

தரமானதும், இங்கேயே உருவானதுமான நிகழ்ச்சிகள் இடம்பெறவேண்டும் என்பதே பலரது விருப்பமுமாகும். இதையடுத்து நிகழ்ச்சியில் இலங்கை ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் நிருபரான சிசிர சிங்களப் பாடல் ஒன்றைப் பாடினார். குரலும் இசையும் ஒத்துழைக்காவிட்டாலும் அவரது முயற்சி பாராட்டும் வகையில் அமைந்திருந்தது.

## நிரோசிகா

இறுதியாக இடம்பெற்ற 'த நூட்ஸ்' குழுவினரின் இசைநிகழ்ச்சி பார்வையாளர்களைப் பெரிதும் எதிர்பார்க்க வைத்தது. ஆனால் அந்த எதிர்பார்ப்புகள் பெரிதும் நிறைவேறவில்லை என்பதுபோலவே தோன்றியது. சில பாடல்களில் பாடகர்களின் குரலைவிட இசை அதிக சத்தமாக ஒலித்தமையும் இதற்கு முக்கிய காரணம் எனலாம். மொத்தத்தில் பொங்கல் நிகழ்ச்சி நல்ல அம்சங்களுடன் இருந்தபோதும் சில விடயங்களில் சிறப்பாக அமையத் தவறிவிட்டது உண்மை. முக்கியமாக பொங்கல் கொண்டாடப் படுவதன் நோக்கம், கருத்துகள் என்பன பற்றி நிகழ்ச்சி எதுவிதத்திலும் பிரதிபலிக்கவில்லை. உழவர் திருநாள் என்பது எந்த நிகழ்ச்சியிலும் பிரதிபலிக்கவில்லை. தவிரவும் நாடு மிகுந்த சிக்கலான சூழ்நிலையில் உள்ளபோது அதுபற்றிய எந்த வெளிப்பாடும் நிகழ்ச்சியில் இல்லாதது கவலை தருவதாக இருந்தது. இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் முற்றாக நீக்கப்பட்டு நல்ல நிகழ்ச்சிகள் இடம்பெறவேண்டும் என்பதே எனது அவா. நல்ல நிகழ்ச்சிகளை நடத்துவது சிரமம்தான்; முடியாத காரியமல்ல! ●

## நிகழ்வுகள்

* தமிழ் நோர்வே மக்கள் இணைவுகூடம் நடத்திய பொங்கல் விழா ஒஸ்லோவில் கலை நிகழ்ச்சிகளுடன் சிறப்பாக நிகழ்ந்தது.

* நோர்வே தமிழ்ச் சங்கம் தனது பொங்கல் கலைவிழாவை ஒஸ்லோவில் சிறப்பாகக் கொண்டாடியது.

* இலங்கையின் சுதந்திர தினத்தையொட்டி சுவீடனில் உள்ள இலங்கைத் தூதரும் கலந்துகொள்ளும் விதத்தில், ஒஸ்லோவில் 'இலங்கையர் ஒன்றியம்' இரவு விருந்துடனான கொண்டாட்டங்களை ஒழுங்கு செய்திருந்தது. இலங்கை மக்கள் உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்காதபோது சுதந்திரதின விழாவைக் கொண்டாடுவது அர்த்தமற்றது என்பதை விழாவுக்கு வந்திருந்த நோர்வேஜிய மக்கள் உட்பட அனைத்து மக்களுக்கும் அறியத்தரும் விதத்தில் துண்டுப் பிரசுரம் ஒன்றை விழாவுக்கு வந்திருந்த மக்களிடம் சுவடுகள் இலக்கிய வட்டத்தினர் வினியோகித்தனர். 'சகல மக்களுக்குமான சுதந்திர தினம்' என்று பம்மாத்துக் காட்டி, சமாதானப் போர்வையில் மறைந்திருக்கும் பிரேமதாசா அரசின் உண்மை முகத்தை அம்பலப்படுத்தும் விதத்தில் பிரசுரம் அமைந்திருந்தது.

## தேனீ

*இருமாத இதழ்*
Im Wacholder 11,
7151, Almerbach im Tal,

www.tamilarangam.net

## எல் சல்வடோர்

# அடுத்த கட்ட அபாயத்தை நோக்கி.....

'உலக நீதிபதி' அமெரிக்காவின் 'பெருமுயற்சி'யால் எல் சல்வடோரின் பன்னிருவருட கால உள்நாட்டு யுத்தம் 'முடிவு'க்குக் கொண்டுவரப் பட்டுள்ளது. பெப்ரவரி முதல் தேதியுடன் யுத்தநிறுத்தம், ஒப்பந்தம் என்பன நடைமுறைக்கு வருகின்றன. இத்துடன் நீண்ட காலமாக இடதுசாரி கெரில்லாக்களான எ∴ப்.எம்.எல்.என்.க்கும், வலதுசாரி அரசுக்கும் இடையில் நிலவிய யுத்தம் முடிவுக்கு வரும் என எதிர்பார்ப்புகள் நிலவுகின்றன.

எல் சல்வடோரில் தொடர்ச்சியாக நிலவிய சமூக ஏற்றத்தாழ்வுகளை மாற்றவும், அமெரிக்காவின் நலன்களைப் பேணிவந்த வலதுசாரி அரசைத் தூக்கியெறிந்து மக்களரசை நிறுவவும் எ∴ப்.எம்.எல்.என் போராடி வந்தது. எனினும் தற்போது இந்த கெரில்லா அணியினர் தமது போராட்டத்தில் இருந்து பின்வாங்கி சில சமரசங்களை ஏற்படுத்த நிர்ப்பந்திக்கப் பட்டமைக்கு முக்கிய காரணங்கள் கிழக்கைரோப்பாவில் நிகழ்ந்த மாற்றங்களும், நிக்கரகுவாவில் சன்டினிஸ்டாக்களுக்கு ஏற்பட்ட தோல்வியும் எனலாம். நாட்டின் பெரும்பகுதியை இந்த கெரில்லா அமைப்பு தனது கட்டுபபாட்டில் வைத்திருந்தமையும், தொடர்ச்சியான படுகொலைகளாலும் மனித உரிமை மீறல்களாலும் கெரில்லாக்களைச் சரணடையச் செய்ய முடியாமையும், அமெரிக்காவினது நிர்ப்பந்தமுமே, பேச்சுவார்த்தைக்கு எல் சல்வடோர் அரசு ஒப்புக்கொள்ள முக்கிய காரணங்கள் எனலாம்.



www.tamilarangam.net

அரசும் அரச ஆதரவுக் கொலைக்குழுக்களும் கெரில்லாக்களை வெல்லமுடியாத சந்தர்ப்பங்களில் நடத்திய மனித வேட்டைகளில் குறைந்தது 75,000 பேர் கடந்த 12 வருடங்களில் கொல்லப் பட்டிருக்கலாம் என நம்பப் படுகிறது.

லத்தீனமெரிக்க நாடுகள் பலவற்றில் இடதுசாரி கெரில்லாக்களும், அரசுகளும் மக்களிடையே பெற்றிருந்த செல்வாக்கைத் தனது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமெரிக்கா கருதியது. இதனால் அமெரிக்கா மேற்கொண்ட பல 'பாதுகாப்பு' நடவடிக்கைகளில் எல்சல்வடோரும் அடங்கியிருந்தது. எல் சல்வடோரில் தனது கைப்பொம்மையாக இருந்த அரசுக்கு ஆயுத பொருளாதார உதவிகளுடன் தனது இராணுவ ஆலோசகர்களின் உதவியையும் வழங்கி எஃப்.எம்.எல்.என். கெரில்லாக்களை அழிக்க அமெரிக்கா முயன்றது. அங்கு ஆட்சியில் இருந்த கொலைகார அரசுக்கு பல பில்லியன் டொலர்களை உதவியாக வழங்கியுள்ளது. நிக்கரகுவாத் தேர்தலின்பின் அங்கிருந்த இடதுசாரி (சன்டினிஸ்டா) ஆட்சி பதவியிழந்ததும், ஓரளவு 'அபாயம்' நீங்கியதாக உணர்ந்த அமெரிக்கா தனது பொருளாதார நெருக்கடிகளுக்கிடையே எல் சல்வடோர் அரசுக்கு உதவுவது கடினம் என்பதால் பேச்சுவார்த்தைக்கு நிர்ப்பந்தம் செய்துள்ளது வெளிப்படை. ஆனால் இந்தப் பேச்சுகளாலோ தீர்வுகளாலோ அமெரிக்க நலன்கள் எதுவும் பெரியளவில் பாதிக்கப்படப் போவதில்லை. அண்மையில் நிகழ்ந்த பேச்சுகளில் கெரில்லாக்கள் தாம் எந்த நோக்கங்களுக்காகப் போராடத் தொடங்கினார்களோ அவற்றில் பலவற்றைக் கைவிடவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியுள்ளனர். ஒப்பந்தத் திட்டத்தின்படி எதிர்வரும் ஒக்டோபர் மாதமுடிவில் முற்றாக ஆயுதங்களைக் கைவிட உள்ள கெரில்லாக்கள், அயுதங்களைக் கைவிடலே தாம் அமைதியின் மீது கொண்டுள்ள ஆர்வத்தின் அடையாளம் என்கின்றனர். கெரில்லாக்களில் ஒருபகுதியினர் புதிதாக அமைக்கப்பட உள்ள சிவில் பொலிஸ் படையில் சேர்வர். ஏனையோர் சாதாரண மக்களாகப் பொதுவாழ்விலும், அரசியல் வாழ்விலும் கலப்பர்.

## பச்சை மண்ணின் புதல்வர்

*நித்திரையில் மூத்திரம் பெய்த*
*சிறுவனின் ஈரக் கழிசானைக் கழட்டி*
*இராணுவச் சீருடைகள் தந்தனர்*
*பெரியோர்.*

*கழிசான் தளர்ந்து கீழே விழுகிறது*
*இறுக்கிக் கட்டுவதற்கு*
*பெல்ற்றில் அதற்குமேல் ஓட்டைகள்*
*—இருக்கவில்லை.*

*அரைநாண் கொடியை இழுத்து*
*கழிசானை இறுக்கினான் சிறுவன்*
*கழிசானைப் பிடித்தபடியே*
*அவன் இறந்தும்போகிறான்.*

*சுவர்*
*செத்த பிணத்தின் நிழலைத் துரத்தியது*
*நிழல்*
*பாசி படர்ந்த சுவரில்*
*ஒட்ட மறுத்தது, வருந்தியது*
*பாசி*
*தனது சுவரில் தூசணம் எழுதப்போகும்*
*கைகளுக்காக இன்னும் காத்திருக்கிறது.*

● சுகன்

www.tamilarangam.net

மறுபுறத்தில் அரசு தனது படைகளின் எண்ணிக்கையை கணிசமானளவு குறைக்க உள்ளது. எனினும் இவ்வாறு படைக்குறைப்புச் செய்யப்படும் என்பதற்கோ, அரசினால் மறைமுகமாக இயக்கப்படும் கொலைக்குழுக்கள் முற்றாகக் கலைக்கப்படும் என்பதற்கோ முற்றான உத்தரவாதம் இல்லை. இது மிகவும் ஆபத்தான நிலைமையாகும்.

உள்நாட்டு யுத்தம் தோன்ற அடிப்படைக் காரணமான வறுமையை ஒழிக்க அரசோ, அமெரிக்காவோ எந்த உத்தரவாதமும் வழங்கவில்லை. நிலப்பிரபுக்கள், பெருமுதலாளிகளின் தொடர்ச்சியான சுரண்டலுக்கும் எதுவித தடையுமில்லை. சுரண்டலுக்கு உள்ளாகும் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் யாரும் உத்தரவாதம் வழங்கவில்லை.

எல் சல்வடோரில் இந்த ஒப்பந்தம் நடைமுறையில் வெற்றியளிக்குமா என்பது ஒரு பெரிய கேள்வி. கடந்த வருட இறுதியில் நிகழ்ந்த இரு முக்கிய சம்பவங்கள் இந்தக் கேள்வியை மேலும் பெரிதாக்குகின்றன.

1989இல் ஆறு மதகுருமாரைக் கொன்ற குற்றச்சாட்டில் சில இராணுவச் சிப்பாய்களுக்கு எதிராகக் கடந்த வருடம் செப்டம்பர் மாதம் வழக்கு நிகழ்ந்தது. சிப்பாய்களுக்காக வாதாடிய (அரசு சார்பு) வழக்கறிஞர் நீதிமன்றத்திலேயே வைத்து யூரிகளைப் பின்வருமாறு மிரட்டினார். "நீங்கள் காலையில் வெளியே செல்லும்போது மாலையில் உயிரோடு திரும்புவீர்களா என்பது உங்களுக்கே தெரியாது". சிப்பாய்களை நிரபராதிகள் என நீதிமன்றில் கூறுமாறும், இல்லாவிடில் யூரிகள் கொல்லப்படுவர் எனவும் இந்த மிரட்டல் நிர்ப்பந்தித்தது. வழக்கு முடிவில் சிப்பாய்கள் அனைவரும் நிரபராதிகள் என விடுவிக்கப்பட்டனர். இவர்களது விடுதலையைத் தொடர்ந்து வழக்குத் தொடுத்தவர்களும் நீதிபதியும் நாட்டைவிட்டுத் தப்பியோடிவிட்டனர்.

டிசம்பரில் கெரில்லாக்களையும், ஐ.நா. பிரதிநிதிகளையும் பேச்சுவார்த்தைக்காக நியூயோர்க் அழைத்துச் செல்லவிருந்த விமானத்தில் அரசாலோ கொலைக் குழுக்களாலோ குண்டு வெடிக்கப்பட்டது.

இந்த இரு சம்பவங்களும் கொலைக் குழுக்களும், அரசும் அடிப்படை மாற்றத்தை விரும்பவில்லை என்பதையே காட்டுகின்றன. இந்த நிலையில் கெரில்லாக்கள் தமது ஆயுதங்களைக் கையளிக்கும் பட்சத்தில் எல் சல்வடோரில் என்ன நிகழும் என்பதை யாரும் ஊகிக்க முடியாது●

**● சிவன்**

*'அமெரிக்காவின் நேரடி ஈடுபாடு இல்லாவிட்டால் இந்த ஒப்பந்தம் சாத்தியமாகியிராது, இதையிட்டு அமெரிக்கா பெருமையடைகிறது' அமெரிக்காவின் துணை வெளிநாட்டமைச்சர் பேணாட் அறொண்சன் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானபின் கூறியது இது. நேரடி ஈடுபாடு என்று அவர் குறிப்பிட்டது, அமெரிக்கா இந்த ஒப்பந்தத்திற்காக எல் சல்வடோரின் கொலைகார அரசுக்கு 'லஞ்ச'மாக வழங்கிய 4000 பில்லியன் டொலர்களை. ஆனால் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைப் புனர்நிர்மாணம் செய்யவும், பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணத்துக்கும் குறைந்தபட்சம் தேவையான 2000 மில்லியன் டொலர்களை வழங்க அமெரிக்க அரசு தயாராக இல்லை என்பதுதான் அமெரிக்காவின் அமைதித் திட்டம்.*

www.tamilarangam.net

## இலக்கியத்துக்கான நோபல் பரிசு
# நிறவாதத்துக்கு எதிரான படைப்பாளிக்கு!



இலக்கியத்துக்கான 1991ஆம் ஆண்டின் நோபல் பரிசு நடின கோர்டிமருக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பரிசுக்கு இவரது பெயர் முன்னர் பல தடவைகள் பிரேரிக்கப் பட்டிருந்தாலும் இம்முறையே அவர் பரிசுக்காகத் தெரிவாகியுள்ளார்.

முன்னர் இலக்கியத்துக்கு நோபல் பரிசு பெற்ற ஒட்டாவ் பாஸிற்கு அடுத்தபடியாக இவருக்கு வழங்கப்படும் நோபல் பரிசு பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளதோடு பாராட்டையும் பெற்றுள்ளது. காரணம், இவரது படைப்புகள் நிறவாதத்தைக் கடுமையாகச் சாடுவதோடு மனிதப் பண்பைத் தேடுவதாகவும் உள்ளமையே.

நடின கோர்டிமர் இலக்கியத்துக்காக நோபல் பரிசு பெறும் ஏழாவது பெண்மணியாவார். கடைசியாக 1966ஆம் ஆண்டு நெலி சச்ஸ் என்ற பெண்ணிற்கு வழங்கப்பட்டு 25 வருடங்களின் பின்னர் இம்முறை நடினவுக்கு வழங்கப்படுகிறது.

அறுபத்தேழு வயதான நடின சிறுவயதாக இருக்கும்போது தான் ஒரு பாலே நடனக் கலைஞராக வளரவிரும்பினார். அவரது அந்தக் கனவு நினைவேறவில்லை. பிறப்பிலேயே இருதய நோயாளராக இவர் பிறந்தமையால் தாயார் நடனம் பயில மகளை அனுமதிக்கவில்லை. உடற்பயிற்சி போன்ற கடினமான எதையுமே செய்ய வைத்தியர்கள் நடினவை அனுமதிக்கவில்லை. இதன் தொடர்ச்சியாக பதினொரு வயதில் பாடசாலை செல்வதையும் பெற்றோர் நிறுத்தினர். இதன்பின் 'ஸ்பிரிஸ்' நூலகம் இவரது

www.tamilarangam.net


நிரந்தர வாழ்விடமாக மாறிவிட்டது. இங்குதான் நடினவின் சமுதாய உணர்வைத் தூண்டிவிட்ட Jungle (Uptan Sinclair) நாவலை வாசித்தார். சிக்காகோ நகர இறைச்சித் தொழிலாளர்களின் வாழ்வு பற்றியது இந்த நாவல்.

இந்த நாவலில் வரும் இறைச்சித் தொழிலாளர்களின் வாழ்வை ஒத்ததாகத் தனது அயலில் உள்ள சுரங்கத் தொழிலாளர்களான கறுப்பர்களின் வாழ்வும் இருந்ததை அவர் காண நேர்ந்தது. இதன் பின்னர் இந்தத் தொழிலாளர்கள்மீது நடினவின் கவனம், பார்வை திரும்பியது. இந்தத் தொழிலாளர்கள் நடத்தப்படும் முறை மிகவும் அச்சம் தருவதாக இருந்தது என நடின குறிப்பிட்டிருக்கிறார்.

நடின கோர்டிமெரின் முதலாவது கதை பிரசுரமாகியபோது அவரது வயது 15மட்டுமே. இவரது சிறுகதைத் தொகுப்பான 'Face to face' 1949இல் வெளியாகியது. இவரது ஆரம்பகால எழுத்துகளில் இருந்தே தென்னாபிரிக்கா தவிர்ந்த நாடுகளிலும் உள்ள பல இலக்கிய ஆர்வலர்கள் இவரைச் சிறப்பாக அடையாளம் கண்டுகொண்டனர்.

நடினவுக்கு ஏற்கனவே பல சர்வதேச விருதுகள் கிடைத்துள்ளன. இங்கிலாந்தின் W.H.Smith பரிசு, James Tait Blacks பரிசு, இத்தாலியின் Malapate பரிசு, பிரான்சின் Grande Aigle d'Or பரிசு, ஜேர்மனியின் Nelly Sache பரிசு என்பன இவற்றுள் சில. தென்னாபிரிக்காவின் CNA பரிசை நான்கு தடவை பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. My Son's Story என்பதுவே இதில் கடைசியாக விருது பெற்ற படைப்பாகும்.

கோர்டிமர் தனது இலக்கியத்தினூடாக கொடூரமான நிற ஒதுக்கலுக்கு எதிரான குரலை எழுப்பினார். இந்தப் போராட்டமும், மனித நேயத்துக்கான குரலுமே கோர்டிமரின் வாழ்வின் நாதமாக விளங்கின. இவரைப் பற்றி இன்னொரு தென்னாபிரிக்க எழுத்தாளர் கூறியது இது; "தென்னாபிரிக்க வெள்ளையர்கள் நடின கோர்டிமரை அறிந்தது மிகக் குறைவு. கோர்டிமர் வெள்ளையர்கள்மீது அனுதாபம் காட்டியதில்லை"




"நடின தனது சமகாலத்தின்மீது தீவிரமாக இருந்தார்" என சல்மான் ருஷ்டி ஒருதடவை குறிப்பிட்டுள்ளார். இத்தனைக்கும் நடினவின் தாயார் ஒரு ஆங்கிலேய வெள்ளையர். தந்தையார் லித்துவேனியாவைச் சேர்ந்தவர்.

1989இல் பதினொரு கறுப்பினப் போராட்டக்காரர்களுக்கு எதிரான வழக்கு ஒன்றில் அவர்களுக்காக சாட்சி சொல்லி வாதிட்டவர் நடின. பின்னர் நீதிமன்றின் வெளியே இதுபற்றி நண்பர்கள் கேட்டபோது பளிச்செனப் பதிலளித்தார். "இதில் குழப்பமே இருக்கமுடியாது. ஓர் எழுத்தாளன், தான் எடுத்துக்கொண்ட மக்களின் போராட்டத்தின் பக்கமே நிற்கமுடியும்"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரு வருடங்கள் முன்னர் சுவீடனுக்கு விஜயம் செய்கையில் நடின கூறினார்,

"ஓர் எழுத்தாளனின் கடமையானது உண்மையைப் பற்றி எழுதுவதாகும். தென்னாபிரிக்கா பற்றி எழுதுவது, உலகம் முழுவதும் சென்று நிற ஒதுக்கலுக்கு எதிரான தார்மீக ஆதரவைத் திரட்டுவதாகும்"

நடின கோர்டிமர் இதுவரை பத்து நாவல்களையும், 200க்கு மேற்பட்ட சிறுகதைகளையும் எழுதியுள்ளார். இவரின் பல புத்தகங்கள் தென்னாபிரிக்க அரசால் தடை விதிக்கப்பட்டுள்ளன.

இவரது The late bourgeois world என்ற நாவல் மிகச் சிறப்பானதாகக் குறிப்பிடப்படுகிறது. இவரது எழுத்துகள் பலரையும் கவர்ந்தமைக்கான முக்கிய அம்சம், இயல்பான கதைக்கருவும், அதை அழகாகச் சொல்லும் மொழிநடையுமே.

## இலக்கியா

இவரது பல நூல்கள் தடைசெய்யப் பட்டபோதும் பிரச்சனைக்குரிய விடயங்களைத் தொடர்ந்தும் சளைக்காது எழுதிவருகிறார். தணிக்கையாளர்களின் அளவுகளுக்கு அப்பால் சென்று அவர்களை ஏமாற்றும் வகையில் இவரது பல படைப்புகள் விளங்குகின்றன. 1988இல் நடின ஆபிரிக்கத் தேசிய கொங்கிரசில் இணைந்து அரசியலிலும் நேரடியாகத் தம்மை இணைத்துள்ளார்.

இவரது நல்ல படைப்புகள் தமிழிலும் மொழிபெயர்க்கப் படவேண்டும். இவரது போராட்ட இலக்கியத்தில் இருந்து நமது படைப்பாளிகள் பல விடயங்களைக் கற்றுக்கொள்ள முடியும். இதன்மூலம் எமது படைப்பாளிகளும் நமது மக்களின் விடுதலைப் போராட்டத்தில் சரியான, நேர்மையான பங்களிப்பை வழங்கமுடியும்.

*நோபல் பரிசு மூலம் கிடைக்கும் பணத்தை தென்னாபிரிக்க எழுத்தாளர்களின் வளர்ச்சிக்கு செலவிட உள்ளதாக நடின கோர்டிமர் கூறியுள்ளார்.*

*இவரது படைப்புகள்:*

*நாவல்கள்*

The Lying Days (1953), A world of Strangers (1958), Occasion for Loving (1963), The Last Bourgeois World (1966), A Guest of Honour (1970), The Conservationist (1974), Burger's Daughter (1979), July's People (1981), A Sport of Nature (1987), My Son's Story (1990), Jump (1991),

*சிறுகதைத் தொகுப்புகள்*

Face to Face (1949), The Soft Voice...., (1952), Six Feet of The Country (1956), Friday's Footprint (1960), Not For Publication (1965), Livingstone's Companions (1971), Selected Stories (1975), A Soldier's Embrace (1980), Something Out There (1984)



www.tamilarangam.net

# மனதுக்குள் மரம்விழுந்த ஒரு மாலைப்பொழுது

● சோலைக்கிளி

இன்று கடற்கரைக்குப் போகவில்லை.
புல்லாங் குழலூதும் இளந்தாரிக் காற்றுக்கு
நெஞ்சு மயிர்களை விளையாடக் கொடுத்து
ரசிக்க மனமுமில்லை.
பாவம் அநத்
இலைப் பச்சை நிறப் பறவை,
நெத்தலிமீன் விட்ட கடதாசி பட்டம்போல்
என்னைத் தேடி அலைகளுக்கு மேலால்
ஆடிப் பறந்திருக்கும்.

துக்கம்தான்,
மனதுக்குக் குறுக்காலே விழுந்துள்ள மரத்தை
தூக்கி வீசி எறிந்துவிட்டுப் போனால்
உதிக்கும்
நிலவென்ன குளிர்ந்திடுமோ?
கொச்சிக்காய் கரைத்த
பால்தான் வழியும்!

நான்
தோல் கழற்றி எறிந்து
நரம்பில் நெருப்புவைத்து
கொழுப்போடு சேர்ந்து கரைகின்றேன், நீ போ.

ஏன்
அந்தி மாலையிலும் சூரியன் நடுவானில்
நின்று எரிகிறது!

என் மண்டை ஓடு பறந்து எங்கோ
போக மூளை
கொதித்து வழிந்து நிலத்தில் கசிகிறது.

நீ போ!
கடற்கரைக்கு நீ போ!
பாவம் அந்த இலைப் பச்சை நிறப் பறவை
எதிர்பார்த்துத் திரியும்.
அதனிடத்தில் போய் சொல்லு

"அவர் வரமாட்டார்".

அங்கே..... அதோ! அங்கே........
என் இதயத்தின் பாதியை கொத்திப் புசித்தபடி
ஒரு குருவி!

●

06.09.1991

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மக்களுக்குப் பயப்படும் டொக்டர்கள்

ஞாபினி

எமது போராட்டம் தொடங்கிய நாளில் இருந்து முதலில் வெளிநாடு கிளம்பியவர்கள் டொக்டர்களும், பொறியியலாளர்களும் தான். இது ஐம்பதாம் ஆண்டுகளில் தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவந்தபோது ஆரம்பித்தது. இதைத் தொடர்ந்து எழுபதுகளில் தரப்படுத்தலைத் தொடர்ந்து இன்னும் 'படித்த' பலரும் வெளியேறினர். (இவர்களில் அனேகர் வெளிநாடுகளில் தமது சுகபோகங்களைத் தேடிக்கொண்டார்களே அன்றி தமது தாய்நாட்டையோ மக்களைப் பற்றியோ எதுவும் செய்ததும் இல்லை, சிந்தித்ததும் இல்லை) பின்னர் 83 கலவரமும் அதைத் தொடர்ந்து 'விடுதலை' இயக்கங்களின் எழுச்சியும் போராட்டமும் மேலும் பலரை வெளிநாடு நோக்கி நகர்த்தியது. விடுதலை இயக்கங்களும் எஞ்சிய வைத்தியர்களைத் துப்பாக்கி அறிவின்படி தாம் நினைத்தவாறே வைத்தியம் செய்ய நிர்ப்பந்தித்ததும் மேலும் பலரை வெளியேற்ற, இன்று வடக்கு கிழக்கில் இக்கட்டான நிலையில் போதிய வைத்தியர்கள் இன்றி மக்கள் யுத்தமுனையில் தவிக்கின்றனர். தற்போது இனவாத அரசின் இரக்கமற்ற குண்டுவீச்சும் துப்பாக்கிச் சூடுகளும் உயிருக்குப் போராடும் நிலையில் பலரை நிறுத்தியிருக்கிறது. உணவுத்தடை, போதிய மருந்து வசதிகள் இல்லாமையால் மக்கள் மேலும் நோய்களுக்கு உள்ளாகுகின்றனர். இவற்றோடு வைத்தியர்களும்தான் அவஸ்தைப் படுகின்றனர். யாழ் வைத்தியசாலையில் போதிய வைத்தியர்கள் இல்லாமையால் வைத்தியத்துறை மாணவர்களே நோயாளிகளைக் கவனிக்கின்றனர்.

அண்மையில் எனக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு நண்பர் எழுதிய கடிதத்தில் மக்களின் மோசமான கஷ்டநிலை பற்றி அவர் இவ்வாறு எழுதியுள்ளார்.

நோய் காரணமாக வைத்தியசாலைக்கு வரும் மக்களுக்கு வழமையாக மருந்து கொடுத்து அத்துடன் இன்ன இன்ன நல்ல சாப்பாடுகளும் சாப்பிடுங்கோ என்று சொல்வது வழக்கம். இப்போது மருந்தைக் கொடுத்து (மருந்து வகைகளுக்கும் தட்டுப்பாடு என்பதால், சிலவற்றைக் கொடுத்து) மருந்துடன் 'நல்ல சாப்பாடு' சாப்பிடுங்கோ என்று யாராவது வைத்தியர்கள் சொன்னால் "என்ன டொக்டர் நக்கலா அடிக்கிறீங்கள்?" என்று வைத்தியரைச் சாத்தாத குறைதான். காரணம் ஒருநேரப் பசிக்கே சாப்பாடு கிடைப்பது பெரும்பாடாக உள்ளபோது 'நல்ல' சாப்பாட்டுக்கு எங்கே போவது? இப்படி மக்களோடு வைத்தியர்களும் கஷ்டப்பட வேண்டிய நிலைதான். ம்... அரசும், கூட்டாளிக் குழுக்களும் பட்ட பாடு! ●

www.tamilarangam.net

# இறந்தும் உயிர்வாழும்

## அருண ககதகமே



தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை எவ்வாறு திரிபுபடுத்தி சிங்கள அரசு பிரசாரம் செய்கிறதோ அவ்வாறே சிங்கள மக்கள் தொடர்பாக உண்மைக்குப் புறம்பான செய்திகளைப் பரப்புவதில் தமிழ் அரசியல் தலைமைகளும் பின்னிற்கவில்லை. அன்றைய பாராளுமன்றத் தலைமையில் இருந்து இன்றைய ஆயுதக் கலாசாரத் தலைமைகள்வரை எமது போராட்டத்துக்கு ஆதரவாக உள்ள சிங்கள முற்போக்கு சக்திகளை இனங்காண்பதிலும் அவற்றை அணிதிரட்டுவதிலும் பெரும் தவறுகளையே இழைத்துள்ளனர். ஆனால் நகர்ப்புறங்களில் மட்டுமன்றி கிராமப்புறங்களில்கூட எமது போராட்டத்துக்கு ஆதரவுக் குரல் கொடுக்கும் சிங்கள முற்போக்கு சக்திகள் இருக்கிறார்கள். இசைக் கலைஞர்கள், கவிஞர்கள், பாடலாசிரியர்கள், எழுத்தாளர்கள், விரிவுரையாளர்கள் எனப் பல தரப்பில் இருந்தும் தமிழ் மக்களின் விடுதலைக்கு ஆதரவான குரல்கள் எழுந்து வருகின்றன. எம்மைப்போலவே சிங்கள மக்களும் அரசால் ஒடுக்கப்படுகிறார்கள் என்பதும், இவ்வாறு ஒடுக்கப்படும் அந்த மக்களை எமது போராட்டத்துடன் இணைக்க முடியாமல் இருப்பதும் மிகவும் வேதனைக்குரிய விடயமே.

---

பூவிழி

---

இந்த வகையில் குறிப்பிடத்தக்க ஒருவர், செங்கடகலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அருண கஹதகமே. 1987இல் அரந்தலாவையில் 27 பௌத்த குருமாரைச் சுட்டுக் கொன்ற புலிகளால், அந்த இரத்த

www.tamilarangam.net

வாடை அடங்குமுன்னரே அதே இடத்தில் அருண கஹதகமேவும் சுட்டுக் கொல்லப் பட்டார்.

இவரின் நினைவாக இவரது தமையனார் பியசேன கஹதகமேவினால் *அருண இசைத்த கவிதைகளும் அருணவிற்காக இசைக்கப்பட்ட கவிதைகளும்* என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட கவிதைத் தொகுப்பில் அருணவின் 57 கவிதைகளும் 12 சிங்களக் கவிகளும், இரு தமிழ்க் கவிகளும், ஒரு முஸ்லிம் கவியும் படைத்த அஞ்சலி மற்றும் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. அருணவின் தமையனாரான பியசேன சிங்கள இலக்கிய உலகில் புகழ்பெற்ற எழுத்தாளர்.




*வனவதுமே, வசந்தய விந்தன்னே வித்தி, கொஹித யன்னே வட்ட விதானே, குருல் ஹொரா, வனகத்த சாரிகா* என்பன இவரின் புகழ்பெற்ற படைப்புகள்.

அருண கஹதகமே, கவிதையில் மிக்க நாட்டமுடையவர். ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்ச்சிக்கும், இனவெறிக்கு எதிராகவும் அயராதுழைத்த அருண தொடக்கத்தில் *திவயின* பத்திரிகையில் கடமையாற்றி பின் பயிர்ச்செய்கை திட்ட முகாமையாளராக அரவந்தலாவையில் கடமையாற்றும்போதே கொல்லப்பட்டார். தனது கவிதைகளிலும், சிறுகதைகளிலும் மனிதநேயத்தை வலியுறுத்திய அருணவின் அச்சேறாத பல படைப்புகளை அவரது தமையனார் அச்சேற்றியுள்ளார்.

வன்னிப் பிரதேச ஏழை விவசாயிகளின் துயர், சமூகத்தில் புரையோடிப் போயிருக்கும் சாதி மத ஏற்றத்தாழ்வுகள், தோட்டத் தொழிலாளர்களின் வேதனை இவையே இவரது கவிதைகளின் மையம்.

இவரது கவிதை ஒன்றின் சில வரிகள்;

*தேயிலைப் பெண்ணே கேள்*
*உங்கள் இரத்தத்தால்*
*வழிகின்ற வியர்வையால்*
*மழைநிலம் செழித்ததாலன்றோ*
*தேநீரும் சிவக்கிறது.*

நூலின் முன்னுரையை எழுதியுள்ள பியசேன கஹதகமே, 'எண்பதுகளின் பின்னரைப் பகுதியில் வடக்கிலும் தெற்கிலும் தலைதூக்கிய இளைஞர்களின் வன்முறை தமது அதிகாரத்தை உறுதிப்படுத்த இரு பிரிவினரும் மாற்றுக் கருத்துள்ளவர்களைக் கொலை செய்து தமது பாசிசத் தன்மையை வெளிப்படுத்தினர். இதற்கு யார் காரணமாயிருப்பினும் இறப்பவர் யாவரும் மனிதரே. சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் என்ற வேறுபாடின்றி யுத்தத்தின் அவலம் பொதுமக்களையே பாதிக்கின்றது. அருணவைப் பலிகொண்ட இனவாதத்தை நாம் மறந்தேயாகவேண்டும். அதற்கான சிந்தனையை ஏற்படுத்தும்

www.tamilarangam.net

சம்வாதமொன்றை ஏற்படுத்துவதே எம்மால் செய்யக்கூடிய விடயம்' எனக் குறிப்பிட்டுள்ளார். அவர் தனது முன்னுரையில் மேலும், எல்லா மனிதர்களும் சுதந்திரமாக வாழும் உலகொன்று இருத்தல் வேண்டும், இறந்துபோனவர்களைப் பற்றி அழுது புலம்புவதில் அர்த்தமில்லை, அருணவின் மரணம் யுத்தவெறியை எதிர்க்கும் சிந்தனையை நோக்கி வழிநடத்த வேண்டும். இதுவே அருணவிற்கு நாம்



செலுத்தும் இறுதி அஞ்சலி எனக் குறிப்பிடுகிறார். இவர்கள் மட்டுமன்றி அருணவின் பெற்றோரும் இனவாதத்துககு எதிரான கருத்துடையோர். 58 கலவர வேளையில் இவர்களிடம் தஞ்சமடைந்திருந்த பல தமிழர்களை காப்பாற்ற தனித்து நின்று கையில் கத்தியை ஏந்தியபடி எதிரிகளை விரட்டிப் போராடினார் அருணவின் தாயார். ஆனால் அவரது புதல்வனோ தமிழ்ப் போராளிகளிக் குழுவினால் படுகொலை செய்யப்பட்டார்.

இந்தக் கவிதைத் தொகுப்பிற்கு இலங்கையின் புதிய அலைக் கவிகள் பலர் அஞ்சலிக் கவிதைகள் வழங்கியுள்ளனா. 1989இல் கவிதைக்கான சாஹித்திய மண்டலப் பரிசுபெற்ற சிறந்த பாடலாசிரியர் இரட்ணசிறி விஜேசிங்ஹ, 1974, 1986களில் கவிதைக்கும், சிறுகதைக்கும் சாஹித்தியமண்டலப் பரிசு பெற்ற தயாசேன குணசிங்ஹ, பன்னூலாசிரியர் டபிள்யூ.ஏ.அபேசிங்ஹ, பிரபலம் பெற்ற படமான *அயோமா* கதாசிரியர் தெனகம சிறிவர்தன, விவரண ஆசிரியர் எஸ்.ஜி.புஞ்சிஹேவா, பிரபல பெண்கவி மொனிகாருவன பதிரண போன்றோரின் கண்ணீர் அஞ்சலிகள் நூலிற்குப் பெருமை சேர்க்கின்றன.

மனதைத் தொடும் புஞ்சிஹேவாவின் கவிதையில் இருந்து சில வரிகள்:

*பிறவாக்குழந்தைக் கருவொன்று*
*தாயின் வயிற்றில் கேட்கிறது.*
*அருணமாமா கொலையுண்ட உலகில்*
*நானும்*
*பிறப்பதால் பயன்தான் என்ன?*
*நாங்கள்பிறந்திட நல்லதோர் உலகைப்*
*படைத்திட முயன்றார் அவர்.*

* * * * *

*கருவில் நானும் இருப்பதனால்*
*இன்னும் இனமொன்றெனக்கில்லை.*
*பிறந்துவிட்டால் பின்இனமாவேன்,*
*பின் பிறரால் கொலையுண்பேன்.*
*அன்றேல் என்னால் கொலையுண்பர்*

*இந்தக் கொலையை எதிர்த்தவரே*
*அருண மாமா, அவரில்லா உலகம்*
*சீ எனக்கு வேண்டாம்.*
*கொடுமை புரியும் மானிடரே*

*கருப்பைக்குள் என்னையும் கொன்றுவிடுக.*

www.tamilarangam.net

சிங்கள மொழியில் இடம்பெற்றுள்ள இந்தக் கவிதைத் தொகுப்பில் சேரனின் யமன், தெற்கின் தோழனிற்கு ஒரு கடிதம் எம்.எச்.எம்.ஷம்சின் பார்வையற்ற பயணம், நிர்ருல் நிலாரின் அதிர்ச்சி என்ற கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.

அருண களுதகமே சிந்திய இரத்தம் வீண்போகக்கூடாது. எமமக்களைப் பீடித்துள்ள இனவெறியை முறியடித்து தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்கள் மத்தியில் உள்ள சகல முற்போக்கு சக்திகளும், மக்களின் நலனில் அக்கறை கொண்டு ஜனநாயகத்திற்காகவும், மனித உரிமைகளுக்காகவும், அனைத்து இனங்களுக்குமான சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்துக்காகவும் உழைக்கவேண்டும். அப்போதுதான் அருண போன்று பலியான எண்ணற்றோர் உள்ளங்களுக்கு நாம் காணிக்கை செலுத்த முடியும்.

(தகவல், நன்றி: சரிநிகர்)


**செம்பதாகை**

43, வன்டவெற் பிளேஸ்
தெஹிவளை

**அலைகள்**

HAMRE Gt 7
6900 FlOra

**நான்காவது பரிமாணம்**

Post box 2031
Station C
Downsview
Ontario
CANADA
M3N 2S8


## சிறந்த படம்

கடந்த வருடம் நோர்வே நாட்டுச் செய்திப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திப் படங்களில் மிகச் சிறந்தது என 'ஆப்தன்பூஸ்தன்' நாளேட்டில் வெளிவந்த 'ஒரு குர்திஷ் அவலம்' தெரிவாகியுள்ளது. இதற்காக இந்தப் புகைப்படத்தை எடுத்த க்னுத் ஸ்னாரா கௌரவிக்கப் பட்டுள்ளார். கடந்த வருடம் உலகின் கவனத்தைப் பெருமளவு ஈர்த்த விடயங்களில் குர்திஷ் மக்களின் துயரமும் ஒன்று. வளைகுடா யுத்தத்தின் பின்னணியில் சதாமின் கொடூரமான தாக்குதல்களில் இருந்து தப்ப, மலைகளை நோக்கி ஆயிரக்கணக்கில் புலம்பெயர்ந்தமையும் இங்கு பனிக்குளிர், பட்டினி போன்ற கடுமையான



சூழ்நிலையில் பட்ட அவலங்களும் மனிதகுல வரலாற்றிற்குக் கறைசேர்த்தவை. இந்தத் துயரம் குர்திஷ் மக்களைவிட்டு முற்றாக நீங்காது விட்டாலும் உலகப் பத்திரிகைகள், செய்தி நிறுவனங்களின் கவனத்தைவிட்டு நீங்கிவிட்டது.

குர்திஷ் மக்களின் பல அவலங்களில் ஒன்றைத் தனது கமெராவுக்குள் சிறைப்படுத்திப் பரிசு பெற்ற இந்தப் படமே இம்முறை அட்டையை நிறைத்திருக்கிறது.

சிவன்

www.tamilarangam.net

"மலையக மக்கள் தனித் தேசிய இனமல்ல, அவர்கள் இலங்கையின் பாரம்பரிய (?) வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் ஓரங்கமே (அல்லது பாரம்பரிய தமிழ் மக்களில் உள்ளடங்கியவர்களே). மலையக மக்களைத் தனித் தேசிய இனமெனக் கூறி அவர்களைப் பிரித்து வைப்பது தமிழ் மககளைக் கூறுபோட வழிவகுப்பதுடன் தமிழ் மக்களிடையே பிளவை ஏற்படுத்தவே வழிவகுக்கும்" இது பாரம்பரியமாகத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் (?) அன்றைய தமிழ்ப் பாராளுமன்றத் தலைமைகள் முதல், இன்றைய இராணுவ ஆயுத மேலாதிக்கத்தில் மூழ்கியுள்ள இயக்கங்கள்வரை கூறும் வசனம்.

இவ்வாறு கூறுபவர்களை நாம் இரு பிரிவினராகப் பார்ககலாம்.

1. உண்மையிலேயே தமிழ் மக்கள் மத்தியில் பிளவு ஏற்படக் கூடாது எனவும், இவ்வாறான பிளவுகள் சிங்கள பௌத்த பேரினவாதிகளின் ஆதிக்கம் மேலோங்க வழிவகுக்கும் எனக் கருதுபவர்கள்.

2. மலையக மக்களைத் தங்களின் சமூக நோக்கு நிலைகளில் எதுவிதத்திலும் அங்கீகரித்துக் கொள்ளாதவர்கள், தமது அரசியல் நலன்களை மட்டும் கருத்திற் கொண்டு, மலையக மக்கள் சமூக அரசியல் பொருளாதார நிலைகளில் முன்னேற்றம் அடைவதைத் தடுத்து, தமது

# சொந்தமண்ணில் வாழ்விழந்த மலையக மக்கள் தனித் தேசிய இனமா?

● கொழுந்தன்



www.tamilarangam.net

பேரினவாதத்திற்குள் அவர்களையும் முடக்கிவிட விரும்புபவர்கள்.

இந்த இரு பிரிவினரும் கூறும் காரணம் என்னவெனில் 'மலையக மக்கள் பேசும் மொழியாகத் தமிழ் இருப்பதால் அவர்கள் பாரம்பரியத் தமிழ் மக்களே. அவர்களுக்கும் வடக்கு கிழக்கு மக்களுக்கும் பொதுவான சமூக கலாசார சமய நாகரீகங்கள் உண்டு' என்பது. இவ்வாறு கூறுபவர்கள் ஒரு விடயத்தை மறந்துவிடுகிறார்கள்.

வடக்கு கிழக்குத் தமிழர்களுக்கும், மலையக மக்களுக்கும் பொதுவான அம்சங்கள் இருப்பினும், வேறுபாடான அம்சங்களும் உள்ளன. மலையக மக்களின் கடந்த கால வரலாறு கற்றுத் தந்த, கற்றுத் தருகின்ற பாடங்கள் என்ன? மலையக மக்களின் உண்மைநிலை என்ன? மலையக மக்களை ஒடுக்குவதிலும், ஒடுக்குமுறைக்குத் துணைபோவதிலும், வடக்குக் கிழக்குத் தமிழ்த் தலைமைகளின் பங்களிப்பென்ன? சமூக நோக்கில் நாம் மலையக மக்கழை எந்தளவுதூரம் அங்கீகரித்துள்ளோம்? வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கும், மலையக மக்களுக்குமிடையிலான வர்க்க முரண்பாடுகள் எவை? இவை பற்றியெல்லாம் ஆராயாமல் வடக்கு கிழக்கு தமிழர்கள் தமது குறுகிய நலன்களை மட்டுமே கருத்திற் கொண்டு மலையக மக்களின் சுயாதிபத்திய உரிமையில் தலையிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

1948ஆம் ஆண்டுத் தேர்தலில் மலையக மக்களின் வாக்குகளைப் பெற்றே இலங்கையின் புகழ்பெற்ற இடதுசாரிக் கட்சிகள் அரசியலில் முக்கிய இடம்பிடித்தன. ஆனால் பிரஜாவுரிமைச் சட்டமும் தொடர்ந்த குடியுரிமைச் சட்டமும் மலையக மக்களைச் சொந்த மண்ணிலேயே கொத்தடிமைகள் ஆக்கியபோது 'சிங்கள பௌத்த இனவாத தேசிய'த்துக்கு தலைவணங்கிய போலி இடதுசாரிகள் மௌனம் சாதித்தபோது, அதற்கு மேலாக வடக்கு கிழக்கு தமிழ்த் தலைமைகள், சிங்களப் பேரினவாதிகளுடன் சேர்ந்து மலையக மக்களின் முதுகில் குத்தியதை எவ்வாறு மலையக மக்கள் மறந்துபோவார்கள்? புகழ்பெற்ற அப்புக்காத்தும் ஐ.நா. சபையில் இலங்கையின் சார்பில் மணிக்கணக்கில் பேசியவருமான ஜி.ஜி.பொன்னம்பலம் ஆரம்பித்த, மலையக மக்கள் மீதான ஒடுக்குமுறைக்குத் துணைபோகும் இந்தத் தமிழ்ப் பேரினவாதி ஒடுக்குமுறை இன்றுவரை பல்வேறு வடிவங்களில் மலையக மக்கள்மீது நிலைநிறுத்தப்பட்டு வருகிறது.

சொந்த மண்ணிலேயே வாழ்விழந்த மக்களை 1954ல் கொத்தலாவலை – நேரு சந்திப்பில் உருவான ஜான் கோடிலே வாலா ஒப்பந்தம் முதல் 1964இல் சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தம் மற்றும் 1974இல் சிறிமா – இந்திரா ஒப்பந்தம், 1987இல் ஜே.ஆர் – ராஜீவ் ஒப்பந்தம்வரை மலையக மக்களை மிருகங்களைவிட மோசமாக இலங்கை இந்தியப் பேரினவாதிகளால் நடத்தப்பட்டபோது வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் இரத்தம் கொதிக்கவில்லை. சிங்களப் பேரினவாதிகளால் மலையக மக்கள் ஒடுக்கப்பட்ட போதெல்லாம் வடக்கு கிழக்கு மக்களின் தலைமைகள் ஏதோ ஒருவகையில் இவற்றிற்குத் துணைபோவதில் பின்னிற்கவில்லை. சொந்தமண்ணிலேயே நாடற்ற கொத்தடிமைகள் ஆக்கியபோது யாரும் பொங்கியெழவில்லை. இலங்கை இந்தியப்

www.tamilarangam.net

பேரினவாதிகள் ஒப்பந்தங்கள் மூலம் தாய் தந்தை சகோதர உறவுகள் பிய்த்தெறியப்பட்டுப் புகையிரத நிலையங்களில் அவர்கள் கதறியழுதபோது யாரும் சீறியெழவில்லையே? தோட்டத் துரைமார்களின் நாலுகால் பிராணிகளின் இருப்பிடங்களைவிட மோசமான நிலையிலுள்ள லயங்கள் வெறியர்களால் தீயிடப்பட்டு அம்மக்களை புழுக்களைப் போலத் துன்புறுத்திய போதெல்லாம் (வ.கி) தமிழ்த் தலைமைகள் இந்த மக்களுக்கு சிறு அனுதாபத்தைக்கூடக் காட்டவில்லை. 160 வருடங்களுக்கு மேலாக தாம் வசித்துவந்த தோட்டங்களில் பெரும்பான்மையின மக்கள் குடியேற்றப்பட்ட போதெல்லாம் (வ.கி)


**காலம்**

*இலக்கியக் காலாண்டிதழ்*

K.V.Moorthy
711,Kennedy Rd,#209
Scarborugh, Ont,
Canada


தமிழர்களின் தலைமைகள் அதற்கெதிராகக் குரலெழுப்பவில்லையே? ஆனால் 1972இல் தரப்படுத்தல் அறிமுகம் செய்யப்பட்ட சமயத்தில் நேரடிப் பாதிப்புக்கு ஆளானபோது குடாநாட்டு மக்கள் பௌத்த இனவாத அரசை எதிர்த்துப் போராடத் தொடங்கினார்கள். (தரப்படுத்தல் கொள்கை முற்றாக ஏற்க முடியாத ஒன்று என்றாலும், 1972க்குப் பின்பே பெருமளவு மலையக, கிழக்கு, வன்னி மன்னார்ப் பிராந்திய மாணவர்கள் கணிசமானளவு உயர்கல்வி வாய்ப்புப் பெற்றனர் என்பதையும் மறுக்கமுடியாது.)

1948 முதல் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு வரும் மலையக மக்களுக்கு ஆதரவாக எதுவித சாத்வீக, ஆயுதப் போராட்டத்தையும் மேற்கொள்ளாத (வ.கி) தமிழ்த் தலைமைகள் தமது நலன்கள் பாதிக்கப்பட்டபோது மாத்திரம் சீறி எழுந்தனரெனில் அது புரிந்துகொள்ளக் கூடியதே. இதுமட்டுமா, மலையகத்தில் ஆசிரியர் பதவிபெற்றுச் செல்லும் குடாநாட்டு ஆசிரியர்களில் கணிசமானோர் அந்தப் பிரதேசத்தில் பணியாற்றும்போது, குடாநாட்டுப் பிள்ளைகள்மீது விஷேட அக்கறை செலுத்தும் அதேசமயம் மலையக மாணவர்கள்மீது மாற்றாந்தாய் மனப்பான்மையுடனும் நடந்தனர். இதன்மூலம் மலையகத்தில் இருந்து கல்வியறிவு பெற்ற ஒரு தலைமுறை உருவாவதைத் தடுத்ததுடன் மலையக மக்கள் மீதான தமது ஆதிக்கத்தைத் தொடர்ந்து வைத்திருந்தனர். இதுமாத்திரமன்றி ஆசிரியர் பதவி மற்றும் நிர்வாகப் பதவிகள் பெற்றுச் செல்லும் (வ.கி) தமிழர்கள் தோட்டங்களில் புறோக்கர்களாகச் செயற்பட்டுக் குடாநாட்டு மக்களுக்கு வேலைக்காரர்களைத் தேடுவதிலும் ஈடுபட்டனர். இவ்வாறு பல்வேறு வழிகளிலும் மலையக மக்களைச் சுரண்டுவதில் அல்லது சுரண்டலுக்கு ஒத்துழைப்பதில் சிங்கள பௌத்த இனவாத தலைமைகளுக்கு நிகரான பங்கு (வ.கி) தமிழ்த் தலைமைகளுக்கும் உண்டு.

பாராளுமன்றத் தலைமைகளின் ஆதிக்கம் முற்றுப்பெற்று இராணுவவாத இயக்கங்களின் ஆதிக்கம் ஏற்பட்டபோதும் தொடர்ந்து மலையக மக்கள் கைவிடப் பட்டவர்களாகவே நடத்தப் பட்டனர். அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 'தரகர்'

www.tamilarangam.net

தொண்டமானிடமே மலையக மக்களின் தலைவிதியை ஒப்படைத்துவிட்டு ஒதுங்கிக் கொண்டன ஈழ இயக்கங்கள். மலையக மக்கள்மேல் கூடிய அக்கறை கொண்டதாகக் காட்டிக்கொண்ட ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப், ஈரோஸ் போன்ற அமைப்புகளும் மலையகம் பற்றியோ அம்மக்களது விடுதலை தொடர்பாகவோ தெளிவான பார்வையை முன்வைக்கவில்லை. இந்த அமைப்புகளைச் சார்ந்தவர்கள் மலையக மக்களின் விடுதலைக்கான எந்தத் திட்டத்தையும் முன்வைக்கவில்லை. வேறுசில பொது அமைப்புகளோ மலையக மக்களை ஈழத்தின்(?) எல்லைப்புறங்களில் குடியமர்த்தி வடக்கு கிழக்குப் பிரதேசங்களைப் பாதுகாக்க முயற்சித்ததுடன் அம்மக்களைச் சொந்தப் பிரதேசத்தில் இருந்து வெளியேற்றும் இலங்கையரசின் நோக்கிற்கும் துணைபோயின.

இப்படிப் பல்வேறு வழிகளிலும் மலையக மக்களை ஒடுக்குவதிலும் அல்லது அதற்குத் துணைபோவதிலும் பங்காற்றிய வடக்கு கிழக்கு தமிழ்த் தலைமைகள் தமது நலன்களை மட்டுமே கருத்திற் கொண்டு, 'மலையக மக்களைத் தனித்தேசிய இனமெனக் கூறித் தமிழர்களைக் கூறுபோடக்கூடாது' என்று கூறினால் அது அப்பட்டமான சுயநலமே! தமது கடந்தகாலத் தவறுகளைப் பகிரங்கமாக ஏற்றுக் கொள்ளாமல் மலையக மக்களும் வடக்கு கிழக்கு மக்களும் ஒரே தேசிய இனம் என்று கூறுவது தொடர்ந்தும் மலையக மக்களின் முதுகின்மீது சவாரி செய்வதற்கே. வரலாறு மலையக மக்களுக்கு எவ்வளவோ பாடங்களைக் கற்றுக் கொடுத்துள்ளது.

வடக்கு கிழக்கு தமிழ்த் தலைமைகள் கூறுவதுபோல மலையக மக்கள் வடக்கு கிழக்கு மக்களுடன் சேர்ந்தவர்கள் என்று வைத்துக் கொண்டாலும், முஸ்லீம் மக்களுக்கு இன்று நேர்ந்த கதி நாளை மலையகத்தவர்க்கு நேராது என்று என்ன நிச்சயம்?

தற்போது மலையகத்தில் வாழும் மக்களில் அனைவரும் அந்த மண்ணிலேயே பிறந்தவர்கள் தமது வாழ்க்கைக் காலம் முழுவதும் அங்கேயே வாழ்ந்தவர்கள். உலகில் வேறு எங்கும் சென்றிராதவர்கள். வேறு எந்த நாட்டிற்கும் விசுவாசம் தெரிவிக்காதவர்கள். இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அளவற்ற பங்களிப்புச் செய்தவர்கள். இதுமட்டுமன்றி வடக்கு கிழக்கு மக்களின் 'பாரம்பரிய'த்தில் இருந்து வேறுபட்டவர்கள். பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்காக ஆங்கிலேயரால் தென்னிந்தியாவில் இருந்து 'இறக்குமதி' செய்யப்பட்டு இலங்கையில் குடியேற்றப்பட்ட இம்மக்கள் தனித் தேசிய இனமா என்பது கட்டாயம் தற்போதைய சூழலிலாவது விவாதத்திற்கு உள்ளாக்கப்பட வேண்டும். இவர்கள் தனித் தேசிய இனமாகத் தம்மைப் பிரகடனப்படுத்திக் கொள்ள சகல தகுதியும் உடையவர்கள் என்பதே எனது அபிப்பிராயம். அவ்வாறு அல்லாமல் மலையகத் தமிழர்கள், வடக்கு கிழக்கு மக்களுடன் சேர்ந்து ஒரே தேசிய இனம் என்றால் அதை மலையக மக்கள் சொல்ல வேண்டுமேயன்றி, வடக்கு கிழக்குத் தமிழ்த் தலைமைகள் கூறமுடியாது என்பது முக்கியமானது.●

www.tamilarangam.net

# மதுரைக் காண்டம்


## தமயந்தி

"எடி பிள்ள நெடுக வீட்டுக்குள்ளயே அடஞ்சு கிடந்து என்னம்மா செய்யப்போறாய்? நீ கோயிலுக்கு, பூசைக்குப் போய் எத்தினை கிழமயாப் போச்சு? இண்டைக்காவது போவன். இண்டைக்கு அர்ச்சேஸ்ரவர் திருநாளாம், உதுக்காவது போகலாமெல்லே...."

பொழுது விடிந்ததிலிருந்து அம்மாவின் தொணதொணப்பு ஜெசிக்கு எரிச்சலை ஊட்டியது. தனது பக்கம் இல்லாத எந்த அர்ச்சேஸ்டவரையும் ஜெசி ஏற்கவும், நம்பவும், விசுவசிக்கவும் தயாராயில்லை.

"அந்தோனியாரே, மடுவுமாதாவே, சம்மிக்கேலே இன்னும் எவ்வளவு காலபரியந்தம் என்னையும், என்ரை பிள்ளையளையும் உப்பிடிச் சோதிக்கப் போறியள்? என்ர குடும்பத்த நடுத்தெருவுக்குக் கொண்டுவந்த பாவியள நடுத்தீர்க்க மாட்டியளே......?" முற்றத்தில் கிடந்த சட்டிபானைகளுக்கு சாம்பல் போட்டுத் தேய்த்தபடி அம்மா ஒவ்வொரு கடவுளாய் அழைத்து முறையிட்டு முணுமுணுத்தபடி இருந்தாள். ஜெசிக்கு அம்மாவின் மீது எரிச்சலாய் வந்தாலும், பெற்ற மனதின் புழுங்கி வெளிப்படும் ஆதங்க வார்த்தைகளின் கனதியைப் புரிந்துகொள்ளாமலில்லை.

பிரச்சனை ஊருக்குத் தெரியவராமல்,



www.tamilarangam.net

வீட்டுச் சுவர்களுக்குள்ளேயே மூடிமறைக்க அம்மா எடுத்த அத்தனை முயற்சிகளையும் ஒரு நொடியிலேயே விமலமேரி தவிடுபொடியாக்கிவிட்டாள். தெருவில் நின்று ஊரைக்கூட்டி நாறடித்துவிட்டாள் அவள்.

காற்றில் பறக்கும் புழுதியைப் பிடித்தே சிலை செய்யும் புழுத்துப் புரையோடிய ஊரார் வாய்களுக்கு பதமாக களிமண் குழைத்துக் கொடுத்தால் சும்மாவா கிடப்பார்கள்? விதவிதமாய்ச் சிலைகள் செய்து , ஊதி உயிர் கொடுத்து ஊரின் அத்தனை குச்சொழுங்கை, மூலை முடக்கு, தெருவெல்லாம் உலவவிட்டிருக்கிறார்களே. இந்த நிலையில் எப்படி ஜெசியால் தெருவில் இறங்கமுடியும்? அதுவும், விதவிதமாய் காஞ்சிபுரச் சேலைகளையும் கழுத்தைக் கனக்கவைக்கும் தங்கவடங்களையும் காட்டுவதற்காகவும், இரவுகளில் ஊரில் பிரிந்துபோன வேலிக்கணக்குகளையும், எத்தனை வீட்டுக் கோடிகளில் ஈரச் சாக்கினுள் கோழிகள் அமுங்கின என்பதையும், எவனுக்கு எவள் பாய் போட்டாள், எவனும் எவளும் மரவள்ளித் தோட்டத்தினுள் படுத்தனர் என்பதையும் விலாவாரியாக, சுவைகுன்றாமல் பேசுவதற்கென்றே ஒரு கூட்டம் கோயிலுக்கு வரும். அவர்களிடையே தானும் தரிசனமாகி அவர்களின் வாய்க்குள் தானும் நெரிபடவேண்டுமா என்ற எண்ணம் அவளை நெருடியது. அதைவிட, ஊரில் பாதிக்குமேல் தெருவில் கூடிநிற்க அன்று விமலமேரி வீடுதேடிவந்து வாய்கூசாமல் பேசிய வார்த்தைகள் இன்னும் ஜெசியைக் கூசிக் குனியவைத்தன. "எடி பிள்ள இண்டைக்காவது கொஞ்சம் கோயில்ப் பக்கம் போட்டு வாவனம்மா....." சட்டிபானை கழுவிமுடித்து உள்ளேவந்த அம்மா அவளைக் கெஞ்சுவதுபோல வேண்டினாள்.

"எணை சும்மா கிடவணை, அதொண்டுதான் இப்ப குறைச்சலாக்கும்" ஜெசி தாயை அதட்டிவிட்டு படுக்கையில் சென்று சரிந்தாள். ஜெசி இந்த மூன்று கிழமைக்குள் வாடித்தான் போய்விட்டாள். சாப்பாட்டின் ஒழுங்கீனமும், துயரங்களின் கொடூரமும், அவமானத்தின் நெருடலும் அவளை மிகவும் உடைத்துவிட்டன. உடலளவில் மட்டுமல்ல, உள்ளத்தளவிலும் சோர்ந்துதான் போனாள். சோர்ந்தது அவள் மட்டுமல்ல, அவளது குடும்பமுமே. சோர்ந்து, உளம் நொந்து, உடல்வாடி, நடைப் பிணங்களாய் அவர்கள்........ மூன்று வாரங்களாய் ஜெசியையும், அவளது கண்ணீர்ச் சொரியலையும் தாங்கி நொய்ந்து, நொந்து கிடந்தது அவளது படுக்கை.

முகட்டு வளையையே அண்ணாந்து பார்த்தபடி கிடந்த ஜெசியின் ஆத்மாவின் செவிப்பறைகளில், விமலமேரி அன்று துப்பிவிட்டுச் சென்ற வார்த்தைகள் எதிரொலித்துக் கொண்டிருந்தன. எத்தனை அருவருப்பான வார்த்தைகள்தான் அவை. வேடிக்கை பார்த்த ஆண்களே விலகி ஓடும் நிர்வாணப் பேச்சுகள் அவை. விபத்தில் சிக்கிய ஜெசிக்கு தண்டனையையே நிவாரணமாகத் தந்ததுபோல் இருந்தது விமலமேரியின் சொற்ஷெல்கள். நெருப்புத் தணலால் வெந்துகுவிந்த தொப்பளத்தின்மேல் எண்ணெய்க் கொதியைக் கொட்டியதுபோல் வேதனை தருகின்ற வார்த்தைகளல்லவோ அவை. "சும்மா கிடக்கேலாத வருத்தமெண்டால் கடைகளிலை பிளாஸ்ரிக் சாமான்கள் விக்கிறாங்களாம்..... வாங்கி....."

அலறியடித்துப் படுக்கையை விட்டெழுந்தாள் ஜெசி. தூக்கமற்று விழித்துக் கிடக்கும் விழிகளின் முன்னாலும் அந்த வேதனை, வெட்கம், வெறுப்பு எல்லாம் நிறைந்த நிகழ்வுகள் கனவுகளாய் விரிந்தபடி.

நரகவேதனை என்று வர்ணிக்கப்படும்

www.tamilarangam.net

வேதனையிலும் கொடும்வேதனையை அவள் அனுபவித்து உழன்று தவித்தாள். வெளிவாசலில் தம்பி ஜெயந்தனின் அழுகையுடன் கலந்த அறுந்த பேச்சுத் துண்டங்களும் "என்னடா நடந்தது .... சொல்லடா. ஆராவது ஏதாவது சொன்னவயளே.....? என்ற அம்மாவின் பதைப்புடனான அதட்டலும் கேட்டது.

"உங்கட அக்காவக் கொண்டே அஞ்சுமாச வயித்தக் கழுவிப்போட்டு வந்திட்டியளே எண்டு விமலமேரி கோயிலடியிலை கண்டு கேக்கிறா....." என்று விம்மல்களுக்கிடையே கூறிமுடித்த தம்பி ஜெயந்தன் மீண்டும் பெருங்குரலில் அழத் தொடங்கினான்.

"கொள்ளயில போவாளேவ, என்ர பிள்ளயள் கோயில் குளத்துக்கும் போக வுடுகிறாளவேல்ல. அந்தோனியாரே உவளவேக்கு ஒரு அழிவு கிழிவு வராதே. ஏன் என்ர குடும்பத்த வச்சு வாதிக்கிறாளவயோ....? மடுவு மாதாவே, சம்மிக்கேலே உங்களுக்கும் கண் இல்லையே. நீங்களும் இருந்துகொண்டுதானே இருக்கிறியள்" இத்தனை காலமாக அடக்கி, அமுக்கி வாசித்த அம்மா உரத்துப் பேசவும், திட்டவும் ஆரம்பித்தாள். தொடர்ந்து அம்மாவின் ஏச்சுகளிலிருந்து அம்மா ஒரு முடிவுக்குத் துணிந்தவள்போலத் தென்பட்டாள். படலை திறக்கும் சத்தமும் அதைத் தொடர்ந்து அம்மாவின் ஏச்சுக்குரலும், தெருவில் அம்மா இறங்கிவிட்டதை ஜெசிக்கு உணர்த்தின. இதனால் விளையப்போகும் அனர்த்தங்கள், குழப்பங்களை ஊகித்துப் புரிந்துகொள்ள முடியாதவளாய் ஜெசி வாசற்படியில் வந்தமர்ந்தாள். இத்தனைக்கும் காரணமாகிப் போன, தன்னாலான தவறின் தடங்களை அசைபோட்டபடி வாசற்படித் தூணோடு சாய்ந்து கண்களை மூடிக்கொண்டாள். சவூதியில் உழைப்பின் கடுமையோடு போராடிக் களைத்துவிட்டு கல்யாணத்தில் களைப்பாற ஊருக்கு வந்திருந்தார் ஜெசியின் தாய்மாமன் எபேசியன். எபேசியன் ஜெசியின் தாய் மார்த்தாவுடன் கூடப்பிறந்த இளைய சகோதரன். எபேசியனுக்கு வயது

---

## பெலே

உதைபந்தாட்ட வரலாற்றில் உலகின் மிகச் சிறந்த வீரராகக் கணிக்கப்படும் பெலே (உண்மைப் பெயர்: Edson Arantes de Nascimenta) இந்த வருடம் முதன்முதலாக ரியோ டி ஜெனிராவில் நிகழவுள்ள உலக சூழலியல் மற்றும் வளர்ச்சிக்கான மாநாட்டின் தூதராக முன்மொழியப் பட்டுள்ளார்.

சமாதானி

---

முப்பத்திரண்டாகிவிட்டதால் அவசர அவசரமாய் கல்யாணத்திற்கு ஆயத்தப்படுத்தினர். எபேசியன் காதலித்திருந்த மெற்றலினையே நிச்சயம் செய்தனர். மெற்றலின் விமலமேரியின் தங்கை. சுற்றிவளைத்துப் பார்த்தால் இவர்களும் அவர்களும் ஏதோவகையில் உறவுதான்.

பதிவுத் திருமணத்திற்கான ஏற்பாடுகள் தடல்புடலாக நடந்துகொண்டிருந்தன. பத்தொன்பது வயதுப் பருவக் களையோடு ஜெசி மாமனின் 'திருச்சடங்கு' வேலைகளைக் கழனிக்க சுறுசுறுப்பாய் ஓடித் திரிந்தாள்.


வரப்போகும் தன் எதிர்கால மனைவிபற்றி எபேசியன் ஜெசியோடு புகழ்ந்து பேசுவான். அவளும் மாமனைப் 'பெண்டாட்டிதாசன்' என்று கேலியாகச் சொல்வாள். ஜெசி

www.tamilarangam.net

பெண்தோழியாய் நிற்க எபேசியனுக்கும், மெற்றலினுக்கும் திருமணம்போல் சிறப்பாக பதிவுத் திருமணம் நடந்து முடிந்தது.

எபேசியன், மார்த்தா ஆகியோரின் தாய் அன்னம்மாக் கிழவி. அன்னம்மாக் கிழவி முதுமையில் மூழ்கி முதுகு கூனி, பார்வை மங்கிவிட்டதால் எபேசியனுக்கும் தாய் அன்னம்மாக் கிழவிக்கும் உதவியாய் மார்த்தா ஜெசியை அவர்கள் வீட்டிற்கு அனுப்பிவைத்தாள். அங்கேதான் அந்த அவமானத்திற்குரிய அனர்த்தம் நிகழ்ந்தது. பதிவுத் திருமணம் நடைபெற்ற ஒரு வாரத்தில் அந்தக் கறைபடிந்த இரவு கறுத்துவந்தது. பகிடிபகிடியாக மாமன் எபேசியன் தொட்டுப் பேசியதை அவள் இம்மியளவும் கரவாய் நினைத்துப் பொருட்படுத்தவேயில்லை. தொடாத இடங்களில் அவன் வருடியபோது மாமன் தன்னைக் கீச்சம் காட்ட வஞ்சகமில்லாமற் செயற்படுகிறானென்று வஞ்சகமற்றே நினைத்துக்கொண்டாள். முரட்டுக் கரங்களின் இரும்புப் பிடிக்குள் சிக்கியபோதுதான் அவளுக்கு எல்லாமே ஓடி விளங்கியது. "மாமா" என்று வெறுப்பாய் உறுக்கித் தன்னை விடுவிக்க முனைந்தாள். முற்றத்தில் கரப்பினுள் அடைபட்டுக் கிடந்த கோழி கொக்கரித்தது. பெட்டைக் கோழி கொக்கரித்து விடியவா பேரகிறது? சிந்தனை மீட்பிலிருந்து விடுபட்ட ஜெசி இப்போது நினைத்துக் கொண்டாள். அந்த இரவில், தான் கொக்கரித்துக் கூவியிருந்திருந்தால் தனது வானம் இப்படி இருண்டிருக்காதே என்று.

"ஆர்ரயேனும் புரியனை வளைச்சுப் போடலாமெண்டு திரிகிறியா?" என்று நடுத்தெருவில் தலைமுடியைக் கோதிப் பிடித்துப் பலபேர் மத்தியில் மெற்றலினிடம் அடிவாங்கி அவமானப்படும் நிலை வந்திருக்காதே..... அந்தக் கொடிய இரவில் அலறிக் குளறியாவது



அவனிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ளவேணுமேயென்று ஏன் புலப்படாமல் போயிற்று?

தனது பலவீனத்தை எண்ணித் தன்னைத்தானே நொந்து வருத்திக் கொண்டாள். அவளுக்குள்ளிருந்து அவளே அவளைக் கேள்விகளைக் கேட்டுக் குடைந்துகொண்டிருந்தாள். "ஊரார் சொல்லுற மாதிரி நீயா அவனைப் படுக்கைக்கு இழுத்தனி? அல்லது நீ படுக்கைக்கு இழுக்கப்பட்டியா?

நீ நினைச்சிருந்தா அண்டைக்கு உன்னாலை அதைத் தடுத்திருக்கேலாதா? உந்த நிலைக்கு நீ வர்ரதுக்கு நீயும்தானே காரணமாய் இருந்திருக்கிறாய்? உன்னைக் குற்றம் சொல்லித் தூற்றித் திரியிற இந்தச் சமுதாயம் அவனைப் பற்றி ஏதாவது மூச்சு விகுகுதே? சுண்டுவிரலை நீட்டி எவனாவது, எவளாவது அவனில் குற்றம் சொல்லுறாங்களா? இல்லையே.... கவலைப்பட்டே செத்துத் துலைக்கவேறுமெண்டது உன்ரை தலையெழுத்து. உன்ரை இந்தத் தலையெழுத்தை எழுதினதிலை உனக்கும்

www.tamilarangam.net

பங்கிருக்கு"

"இல்ல...... இல்ல...... இல்..."

தலைவாசலிலிருந்து கோடிவரை அதிர்வது போல் உரத்துக் கத்தி அழுதாள் ஜெசி. வேகமாய் உள்ளே சென்றவள் உடைமாற்றி வெளிக்கிட்டு வாயிற்படி தாண்டி படலை கடந்து தெருவை மிதித்தாள். தெருவில் தூரத்தில் அம்மா வருவது தெரிந்தது. இடையிடையே தெருமண்ணை வாரி அள்ளி எறிந்து திட்டித் தீர்த்து உரக்கப் பேசியபடியே அம்மா வந்துகொண்டிருந்தாள். அம்மா அண்மையில் வரும்வரை தெருமுனையில் காத்துநின்றவள், தாய் அண்மித்ததும் "அம்மா நான் கோயிலுக்குப் போட்டுவாறன்...." என்றுவிட்டு அம்மாவின் பதிலுக்குக் காத்திராமல் கோவிலைத் தேடி நடந்தாள்.

கோவிலுள் நுழைந்த அவளை அங்கிருந்த எல்லா விழிகளுமே அதிசயப் பிராணியைப் பார்ப்பது போல் துழாவி எடுத்தன. அங்கிருக்கும் யாரையுமே அவள் கருத்தில் எடுப்பதாய் இல்லை. எந்தப் பார்வையைப் பற்றியும் கரிசனைப்பட்டவளாகத் தெரியவில்லை. புனிதர்கள் தினத்திற்கான விஷேட திருப்பலியும் முடிந்தாயிற்று. புனிதத்துவமிழந்த சமூகத்துள் இருந்துகொண்டு எந்தப் புனிததர்களையுமே அவள் தொழுவதாயில்லை. ஏதோ ஓர் வைராக்கியத்துடனும் 'நான் குற்றமற்றவள் என்ற வீறாப்புடனும் அவள் எழுந்தாள். திருப்பலி முடிந்து வெளியேறிய சனங்களோடு அவளும் ஆலயத்தைவிட்டு வெளியேறினாள். அவளது நடையில் ஒரு துணிவுத் தன்மை புலப்பட்டது. "குற்றமற்ற புனிதன் யார் இங்கே? அந்த முதற்கல்லை எறியும் புனிதன்யார் இவர்களுள்?" என்பதுபோல அவளின் விழிகளில் கேள்விகள் பரந்து சிதறின.

ஆலய வளவின் ஏதோ ஒரு மூலையிலிருந்து வந்த சைக்கிள் ஒன்று ஜெசியை முட்டிவிடுவது போலத் தரித்து அவளருகில் நின்றது. "என்ன ஜெசி எப்படி இருக்கிறாய்?" சைக்கிளில் இருந்து ஒருகாலை நிலத்தில் ஊன்றியபடி மெற்றலினின் தம்பி ஜோன்சன் நின்றுகொண்டிருந்தான். "என்ன ஜெசி எப்படி இருக்கிறாய்?" என்ற அவனது கேள்வியில் ஏளனமும் இளக்காரமும் தொனித்தது. பார்வையில் பாதிக் கோபமும், நையாண்டி பாதியுமாய்த் தெறித்தது. ஒருகணம் ஜெசி மலைத்துத்தான் போனாள். "இவனுமா?..... இலக்கியம், இயக்கம், முற்போக்கு எண்டு திரியும் இவன்ர பார்வையும்.........."

ஜோன்சனைப் பார்த்து சிறிதாய்ப் புன்னகைத்து தரித்து நின்ற சைக்கிளை விலத்தி நடந்தாள். ஏளனச் சிரிப்பால் அவனின் முகத்தில் அடித்துவிட்ட திருப்தியோடு நடந்தாள். அவள் நடந்துகொண்டே இருக்கிறாள், சும்மாவல்ல நம்பிக்கையோடு....! ●


## நல்லதும் கெட்டதும்

நோர்வே மாநகரசபைகளில் மொடாலேன் மாநகரசபையே (ஹோடலாண்ட் மாநிலம்) சிறந்ததாகக் கருதப்படுகிறது. இந்தக் கணிப்பீடு மக்கள்நலன்கள், வேலைவாய்ப்பு, குறைந்தளவு குற்றவியல் என்ற அடிப்படையில் எடுக்கப்பட்டது. இந்தக் கணிப்பீட்டின்படி மிகமோசமான மாநகரசபையாக துாண (ஒஸ்ற்:போல்ட் மாநிலம்) கருதப்படுகிறது.

● செல்வி

www.tamilarangam.net

# தரப்படுத்தல்....?



ம.வேல்முருகன்

கடந்த முறை நிகழ்ந்த க.பொ.த. பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளியாகியுள்ளன. அதில் 'வழமை போல' வடபகுதியில் இருந்து 250 மாணவர்கள்வரை சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். இதில் விசேஷம் என்னவென்றால் தற்போது இரவில் விழித்திருந்து படிக்க மின்சாரமில்லை. மண்ணெய் கிடைப்பதோ குதிரைக் கொம்பாக உள்ளது. அப்படிக் கிடைத்தாலும் யானைவிலைதான். இதனால் பல மாணவர்கள் இரவில் படிப்பதில்லை. அது மட்டுமல்லாமல் இராணுவ நடவடிக்கைகளால் பெரும்பாலான மக்கள் தமது வீடுகளைவிட்டுக் குடிபெயர்ந்து வேறு இடங்களில் அகதிமுகாம்களில் வசிக்கின்றனர். இதனால் முன்புபோல கல்விக்கான வசதிகள் (முக்கியமாக ரியூசன்) இல்லாமை, தொடர்ச்சியான உணவுத் தட்டுப்பாடு, அமைதியின்மை போன்ற பல கஷ்டங்களுக்கு மத்தியிலும்தான் படிக்கின்றனர். இது ஒருவகையில் பாராட்டப்பட வேண்டியது என்றாலும், யாழ்ப்பாணக் கல்விமுறை பற்றிச் சில கேள்விகள் எழாமலில்லை. வடபகுதியில் போதிய பொருளாதார வளம் இல்லாததாலேயே வடபகுதியில், அன்னியர் ஆட்சிக் காலத்தில் கல்வியை மூலதனமாக மாற்றும் போக்கு இருந்தது. அன்றிலிருந்து இன்றுவரை ஒவ்வொரு தனிநபருக்கும் அல்லது குடும்பத்துக்கும் பொருளாதார பலமாக கல்வி இருந்துவந்திருக்கிறது. ஆனால் மொத்தத்தில் எமது பிரதேசத்தின் பொருளாதார வளத்தைக் கட்டியெழுப்பும் ஒரு பங்களிப்பையும் இந்தக் கல்வி செய்யவில்லை. அந்நிய ஆட்சியின் பின்னரும் கடந்த 44 வருடங்களாக இந்த நிலை நீடிக்கிறது. அந்நியர்கள் அறிமுகம் செய்த கல்விமுறை தமக்குச் சேவகம் செய்யப் பயிற்றுவிக்கும் முறையாகவே

www.tamilarangam.net

இருந்தது. அதன் தொடர்ச்சியையே இன்றும் காண்கிறோம். இந்தக் கல்விமுறையானது மேலும் அந்நியர்களதும் வல்லரசுகளதும் நலன்களைப் பேண உதவியதேயன்றி எமது நலன்களைப் பெருக்கவோ, அபிவிருத்திக்கோ –

இலங்கை என்ற அளவிலோ தமிழீழத்திலோ – உதவவில்லை என்பது ஒரு மிகப்பெரிய கசப்பான உண்மை. ஒரு தேசிய பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கான கல்விமுறையாக எமது கல்விமுறை அமையாதது எத்தனை பெரிய துரதிர்ஷ்டம்.

இதன் தொடர்ச்சியாக வடபகுதியில் பலவந்தமாக பிள்ளைகளைப் படிக்கவைத்து வைத்தியர், பொறியியலாளர்கள் என உருவாக்குவதே ஒவ்வொரு பெற்றோரதும் நோக்கம். இதனால் எமது சமூகம் வெறும் உத்தியோகத்தர்களை உருவாக்கும் ஒரு சமூகமாக உள்ளது. இதன்மூலம் ஒரு சமூகக் கட்டுமானத்தை அது நிகழ்த்தவில்லை. ஒவ்வொருவரும் தத்தமது பொருளாதாரத்தை உறுதி செய்வது தவறல்ல, அதற்குமேல் மற்றைய பல நாடுகளில் உள்ளது போல சமூக பொருளாதார வளர்ச்சிக்கும் சமூக பண்பாட்டு வளர்ச்சிக்கும் தமது பங்குகளை ஆற்றவேண்டும். இத்தகைய சிந்தனைப் போக்கு எமது சமூகத்தில் மிகமிகக் குறைந்தளவிலேயே (அல்லது இல்லாத நிலையே) உள்ளது. இதன் பெறுபேறே தரப்படுத்தலையடுத்தும், இன ஒழிப்பையடுத்தும் பெருமளவில் நிகழ்ந்த 'கல்விமான்கள்' வெளியேற்றம். இன்று விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே எமது நாட்டில் கல்விமான்கள் (அவர்கள் சமூக நோக்கு, சமூகப் பங்கு அற்றவர்களாயினும்) உள்ளனர். இதன் தாக்கத்தைச் சமூகம் பல மட்டங்களிலும் உணர்கிறது. பாடசாலைகளில் போதியளவு ஆசிரியர்கள் இன்மை, யாழ் போதனா வைத்தியசாலையில் போதிய தரமான வைத்தியர்கள் இன்மை (இதனால் மருத்துவ பீட மாணவர்களே நோயாளிகளைப் பார்வையிடவேண்டிய நிலைமை), யாழ் பல்கலைக்கழகத்தில் பல பேராசிரியர்கள், விரிவுரையாளரகள் இன்மையால் பல்கலைக்கழகத்தின் கல்வித்தரம் பெரிதும் குன்றியமை (இதையே காரணம் காட்டி எங்கேயென்றிருந்த இலங்கையரசு யாழ் பல்கலைக்கழகத்தை மூடிவிட முயன்றது, எனினும் பலத்த எதிர்ப்பால் இம்முயற்சியைத் தற்காலிகமாகக் கைவிட்டுள்ளது இலங்கையரசு) என இது யாழ்ப்பாண மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது.

நாம் இவ்வாறான நிலைமைகளுக்கு அரசை மட்டும் குற்றம் சாட்டிப் பயனில்லை. இதைக் கடந்த 44 வருடகால அனுபவம் எமக்கு உணர்த்துகிறது.

அரசோடு, எமது மேல்மட்டங்களும் – வசதிபடைத்த கல்விமான்களும் – இதுபற்றி அக்கறை கொண்டதில்லை. இனியும் காட்டுவார்களா என்பது கேள்விக்குறியே.

தமிழர்கள் உத்தியோகத்தர்களை உருவாக்கியதன்றி சமூக விஞ்ஞானிகளை உருவாக்கியதில்லை. எமது சமூகம் ஒரு மூடுண்ட சமூகமாகவும், பெரியளவில் தன்னலம் பேணும் சமூகமாகவும் ஆனமைக்கு எமது சமூகத்தில் சமூக விஞ்ஞானிகள் தோன்றாமை ஒரு முக்கிய காரணமாகும். சமூக விஞ்ஞானிகளே சமூகம் பற்றிய அறிவுடன் அதன் போக்கைக் கணித்து, சமூகத்தைப் பலதுறைகளிலும் கட்டியெழுப்பக் கூடியவர்கள். சமூகவிஞ்ஞானிகளின்றி இதை எக்காலத்திலும் நாம் செய்ய முடியாது.

எமது தமிழ்ப் பெற்றோர்கள் வைத்தியர்கள், பொறியியலாளர்களை மாத்திரமே உருவாக்கும் கல்வித்

www.tamilarangam.net

திணிப்பை முற்றாகக் கைவிடவேண்டும். அவரவர் விரும்பிய வழிகளில் வளர்வதற்கு ஊக்கம் தரவேண்டும். எமது சமூகம் சில நூறு வைத்தியர்கள் பொறியியலாளர்களால் மட்டும் வாழ்வதல்ல. வேறு துறை அறிஞர்களையும் நாம் உருவாக்க வேண்டும். உதாரணமாக வரலாறு, அகழ்வாய்வு போன்ற துறைகளில் நாம் போதிய அறிஞர்களைக் கொண்டிராததன் விளைவை, வல்லிபுரத்தையும் கந்தரோடையையும் சிங்கள இடங்களாகக் காட்ட முயலும் அரசின் கெட்டித்தனத்தில் காண்கிறோம். இவை பற்றிய விரிவான ஆய்வு மேற்கொண்டு அரசினதும், சிங்கள இனவாதிகளதும் பொய்களை அம்பலப்படுத்த எம்மிடம் யாருமில்லை. இருப்பவர்களும் வெளிநாடுகளில்.

பலலட்சம் பேர் தோற்றும் பரீட்சையில் ஒரு சில நூறு பேர்களே மருத்துவர்களாகவோ, பொறியியலாளர்களாகவோ வர வாய்ப்புண்டு. இந்த நிலையில் மிகுதி லட்சம் பேரின் நிலை என்ன என்பது பற்றி யாரும் சிந்திப்பதில்லை. இதை இனிவரும் காலங்களிலாவது நாம் சிந்திக்க வேண்டும். பெற்றோர்கள், கல்விமான்கள், தேசபக்தர்கள், போராளிகள் இதைக் கணக்கிலெடுத்து எமது சமூகத்தைக் கட்டியெழுப்ப அவசியமான வேலைகளைத் திட்டமிடல் வேண்டும். சமூக விஞ்ஞானிகளையும், ஏனைய அறிவுத் துறை சார்ந்த அறிவாளிகளையும் உருவாக்க முயலவேண்டும். சகல கல்வித் துறையிலும் சமூகம் பற்றிய உணர்வு ஊட்டப்பட வேண்டும். இவ்வாறு குறைந்தளவிலேனும் சமூகம் பற்றிய அறிவு ஊட்டப்படாத கல்வி, சமூகத்திற்குப் பயன்படப் போவதில்லை.

எமது போராட்டம் ஆரம்பித்த காலப்பகுதியில், எமது சமூகம் பற்றிய போதிய அறிவாளர்கள் இல்லாமையாலும், அதுபற்றிய எண்ணம் பெரியளவில் இயக்கங்களுக்கு இல்லாமையாலும் போராட்டம் திசைகெடும் தன்மை பற்றி யாரும் உணரமுடியவில்லை. சிலரிடையே சமூக விழிப்பும், சமூகம் பற்றி அறியும் முனைப்பும் தோன்றியிருந்தபோதும் இது சரிவர நெறிப்படுத்தப்படாது போனமை உண்மை.

எமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான முனைப்பு பல போராட்ட அமைப்புகளாலும் முன்னெடுக்கப்பட்ட போதும் அவர்களால் அதைச் சரியாகச் செய்ய முடியவில்லை.

நோர்வேயின் கலைத்துவ உணர்வுக்கு 'விஜிலண்ட் பூங்கா' ஒரு எடுத்துக்காட்டு. இதுவே நோர்வேயின் சிற்பங்களுக்கான பெரிய காட்சியகமாகக் கருதப்படுகிறது.

இதற்கு அடுத்தபடியாக ஒரு சிற்பப் பூங்கா நோர்வேயின் தென்புல நகரான கிறிஸ்ரியான்சண்டில் திறந்து வைக்கப்பபட்டுள்ளது. இதற்கான வடிவங்களை அமைத்தவர் நோர்வேயின் பிரபல சிற்பி செல்நியூபன் ஆவார்.

– சித்திரகுப்தன் –

இதற்கு முக்கிய காரணம் சமூகம் பற்றிய போதிய ஆய்வும் ஆர்வமும் இல்லாமையே. இதைத் தொடர்ந்து அரசியல் சதுரங்க விளையாட்டில் மாற்று அமைப்புகள் ஒழிக்கப்பட்டன. பின்னர் புலிகளே இத்தகைய பொருளாதார அபிவிருத்திகளில் ஓரளவு ஈடுபடுகின்றனர். இவர்கள் எமது வளங்களைப் பயன்படுத்தி சில புதிய கண்டுபிடிப்புகளை வெளியிட்டனர். பழங்கள் பதனிட்டுப் பாதுகாப்பதில் இவர்களது முறை வெற்றியளித்துள்ளது. சில புதிய பயிர்வகைகள், மாற்று உணவுப் பண்டங்கள்

www.tamilarangam.net

அறிமுகத்திலும் வெற்றி கண்டுள்ளனர். ஆயினும் நீண்டகால நோக்கில் எமது பொருளாதாரத்தை உறுதியாகக் கட்டியெழுப்ப இவர்களிடம் திட்டம் எதுவும் உள்ளதா எனத் தெரியவில்லை.

எவ்வாறாயினும் சரியான சமூக ஆய்வுகள் இன்றி மேற்கொள்ளப்படும் எந்தத்திட்டமும் நீர்ப்பரப்பில் ஏற்படும் குமிழிகள் போல விரைவில் மறைந்துவிடும். இதைக் கவனத்தில் எடுத்து போதிய சமூக விஞ்ஞானிகளை உருவாக்கும் விதத்தில் எமது கல்வி அமைப்பை மாற்றி அமைக்கவேண்டியது அவசியமானது. இன்றேல் நீண்டகாலத்தில் எமது சமூகத்தின் நோய்க்கூறுகளை அடையாளம் காணவோ தீர்வு காணவோ வழியில்லாது போய்விடும். இதை விடுதலைப் புலிகளும் ஏனைய அமைப்புகளும் கவனத்தில் கொள்வார்களா?

விடுதலை அமைப்புகள் ஒருபுறமிருக்க இன்று நாட்டைவிட்டு வெளியேறிய ஏனைய அறிஞர்களும், கல்விமான்களும் இந்த இரு விடயங்கள் தொடர்பான முயற்சிகளில் உடனடியாக இறங்கவேண்டியது அவசியமாகும். இதுபற்றி இனியாவது காலம் தாழ்த்தாது சிந்தித்துச் செயலாற்ற அனைவரும் முன்வருவார்களா? பிரச்சனைகளில் இருந்து மீள்வதற்கு மாற்றுவழியை நாடுவதை விடுத்து நாமே எமது சமூகம் மீது தரப்படுத்தலை மேற்கொள்ளப் போகிறோமா?

UYIRPU
BM BOX 4002
LONDON
WC 1 N 3XX
UK

## உலகின் காப்பாளர்

*உலகின் எந்த மூலை முடுக்கிலாவது சின்னதாக ஒரு அசைவு நடந்துவிட்டால் மோப்பம் பிடித்துக் கொண்டு வந்துவிடுபவர்கள் உலகத்தின் பொலிஸ்காரரான அமெரிக்காதான். அங்கு இவர் போதிப்பதற்கு சுமந்து வருவது சமாதானம், சமத்துவம், ஜனநாயகம் என்பன.*

*ஆனால் உள்ளூரில் இவையெல்லாம் இருக்கிறதோ இல்லையோ உள்ளூர் பொலீஸின் வேலைகள் பயங்கரமானதாகவுள்ளது.*

*இரவு நேரம் லொஸ் ஏஞ்சலிஸ் நகரில் காரில் சென்று கொண்டிருந்த கறுப்பு இனத்தவரான ரொன்டி என்பவரின் கார் 15 பொலிஸ்காரர்களினால் இடைமறிக்கப்பட்டு ரொன்டி காரிலிருந்து இழுத்து வெளியே வீசப்பட்டு இவர்களினால் .மயங்கும்வரை நையப் புடைக்கப்பட்டார்.*

*ரொன்டியை நையப்புடைக்கும் போது பொலிஸார் அறிந்திருக்கவில்லை அத்தனை காட்சிகளைவும் எதிர்வீட்டு நபர் வீடியோ படம் எடுத்துக் கொண்டிருப்பதை. இந்த வீடியோபதிவில் பொலிஸ்காரர்கள் தலைமையகத்துடன் ரேடியோ வயர்லெஸ் மூலம் இடையிடையே தொடர்பு கொண்டதையும் தெளிவாகப் பதிவாகிப்போய் இன்று அமெரிக்காவில் பெரிய புயலைக் கிளப்பியுள்ளது.*

*கறுப்பின மக்களுக்கு எதிரான வெள்ளையர்களின் நடவடிக்கைகள் அண்மைக்காலமாக பலமடங்காக அதிகரித்துள்ளது.*

*சி. குமரன்*

www.tamilarangam.net

# மீண்டு வந்த 'மகாசேனா'

இலங்கையில் அரசியலில் தீவிரமாக ஈடுபட்ட ஒரு சிங்களவருக்கு நோர்வே அரசியல் தஞ்சம் வழங்கியுள்ளது. 'மகாசேனா' என்ற புனை பெயரில் அழைக்கப்படும் இவரை இங்கே கொண்டு வருவதில் சர்வதேச மன்னிப்புச் சபையின் நோர்வே கிளை பெரிதும் உதவியுள்ளது.

1985லிருந்து அரசியலில் தீவிரமாக இறங்கிய 'மகாசேனா' 1989ல் பாராளுமன்றத் தேர்தலில் பங்கெடுத்தார். எனினும் அரசுக்கெதிராகவும், இலங்கையில் சர்வாதிகாரத்திற்கு எதிராகவும் தொடர்ந்து போராடியதால் அரசின் கொலைக் குழுக்களின் பட்டியலில் தனது பெயரும் இடம் பெற்றதை 'மகாசேனா' அறிய நேர்ந்தது.

1989ல் அரசின் கொலைக் குழுக்களால் கைதாகிய மகாசேனாவின் நண்பர் சித்திரவதை செய்யப்பட்டு ஆற்றில் வீசப்பட்டார். ஆற்றிலிருந்து நீந்தி தப்பிச் சென்ற நண்பர் முதலில் வந்த வாகனத்தை மறித்தார். அதில் வந்த பொலிசாரிடம், தான் ஜே.வி.பியால் கொண்டு செல்லப்பட்டதாகவும், அவர்களிடமிருந்து தப்பி வந்ததாகவும் கூறிய நண்பரை, பொலிசார் வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

வைத்தியசாலையில் இருந்த நண்பர் சில தினங்களின் பின்னர் முகமூடி அணிந்த மூவரால் வைத்தியசாலையிலேயே கொல்லப்பட்டார்.

நீண்டகாலமாக தடுப்புக்காவலில் இருந்த மகாசேனா தான் படையினரின் முகாம்களில் நேரில் பார்த்த கொடுமையான காட்சிகளை மன்னிப்பு சபையிடம் கூறியுள்ளார். மகாசேனா மீதான வழக்கு முடிந்து அவர் விடுதலை செய்யப்பட்ட போதிலும், பின்னர் கொலைக் குழுக்களால் தேடப்படுவது பற்றி அறிய நேர்ந்தபோது தலைமறைவானார். நோர்வேயில் மகாசேனாவின் சகோதரரும், சகோதரியும் உள்ளனர். இவர்களூடாக தகவல் அறிந்த மன்னிப்புசபையின் நோர்வேக் கிளை மகாசேனாவைக் காப்பாற்ற முயற்சி எடுத்தது.

மன்னிப்புச் சபையின் உதவியினால் மகாசேனாவுக்கு நோர்வே வர விசேட அனுமதி (visit visa) வழங்கப்பட்டதுடன், இவ்வாறு வருபவர்கள் அரசியல் தஞ்சம் கோரமுடியாது என்ற விதியிலிருந்து இவருக்கு நீதியமைச்சு விலக்களித்துள்ளது.

'மஜிக்' யதார்த்தம்

ஒகஸ்ட் மாதத் தொடக்கத்தில் ஐட்ஸ்வோல் நகரில் செக்கோஸ்லாவாக்கிய ஓவியர் யான் ரபினின் ஓவியக் கண்காட்சி இடம்பெற்றது. இவரது ஓவியப் பாணி யதார்த்த வகைப்பட்டதல்ல. இதை இவர் 'மஜிக்' (மாய) யதார்த்தம் என அழைத்துக் கொள்கிறார். இது இன்றைய ஐரோப்பிய ஓவியப் பாணியில் தனியிடம் பிடித்து வருகிறது.

சித்திரகுப்தன்

www.tamilarangam.net

# நடையர் பார்வையில் நாட்டு நடப்புகள்

சில காலங்களில் சில நகைச்சுவைகள் மிகப்பிரபலம் பெறுவது வழக்கம். இந்த வகையில் அண்மையில் பிரபல்யம் பெற்ற நகைச்சுவைத் துணுக்கு இது. மன்னிக்கவும், கற்பனையல்ல.

தமிழ் மக்களுக்கும், இங்குள்ள ஏனைய வெளிநாட்டவர்களுக்கும் நன்கு அறிமுகமானவர் ஆ(ர்)ண மிர்டால். இவர் பற்றி அறியாத தமிழர்கள் நோர்வேயில் இருக்க மாட்டார்கள் என்றே நம்புகிறேன்.

இவர் கடந்த வருடம் ஒஸ்லோவில், தான் தலைமை தாங்கும் இனவாத அமைப்பான 'குடிவரவுக்கு எதிரான நோர்வேஜியர்களி'ன் (FMI) முக்கிய கூட்டத்தை நடத்த முயன்றபோது பத்தாயிரத்துக்கு மேற்பட்ட நிறவாத, இனவாத எதிர்ப்பாளர்கள் தமது முதுகை அவருக்குக் காட்டியபடி நின்று ஆரவாரம் செய்ததனால் கூட்டம் நடத்த முடியாமல் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடியவர். இதற்கு முன்னரும் இவர் 'குடிவரவுக்கு எதிரான மக்கள்' (FMI) என்ற அமைப்பில் தலைவராக

யாழ்ப்பாணம் போவதாக அறிவித்தால் அரசியல் ரீதியாகக் கொஞ்சக் காலத்துக்குப் பரபரப்பை ஏற்படுத்தலாம் என்று.

அவரது திட்டங்கள் ஓரளவுக்குத் தமிழ்ச் சனம் குறைந்தபட்சம் குந்தியிருந்து கேட்கக் கூடியதாக இருந்தன. ஆனால் இதில் உள்ள மிகப் பெரிய வில்லங்கம் என்னவென்றால் இந்தத் திட்டத்துக்கு அரசாங்கமோ, 'மேன்மை தங்கிய' ஜனாதிபதியோ எந்த ஒப்புதலையும் பகிரங்கமாக அறிவிக்கவில்லை என்பதுதான். அப்படி இல்லாத நிலையில் தற்செயலாகப் பேச்சுகள் நடந்து புலிகளே அவரது திட்டத்தை ஏற்றிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பது தெரியவில்லை. 'நீர் யார் அள்ளிப் போடுகிறீர்கள்? என்று அவர் திரும்ப உங்களைக் கேட்கலாம். இல்லாவிட்டால் மலையகம் கண்டபடி கைதுகள், படுகொலைகள் என்று கலவரப்படும்போது, ரோம் நகரம் எரிகையில் பிடில் வாசித்த நீரோ மன்னன் மாதிரி அரசாங்கத்துடன் குலாவியிருப்பாரா தொண்டமான்? என்ன செய்வது, தமிழருக்குக் காலம்காலமாக வாய்க்கும் 'தலைவர்கள்' இப்படித்தான் இருக்கிறார்கள்.

* நோர்வே, குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் குவித்த வெற்றிகளைப் பார்த்ததும் ஒரு நண்பருக்கு (உண்மையில் பலருக்கு) பெரிய ஆச்சரியம். அட, இந்தச் சின்ன நாடு இப்படிக் 'கலக்குகிறதே' என்று.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்தவர். இவர் அண்மையில் ஒரு வேலைக்கு விண்ணப்பித்திருந்தார். அந்த வேலைதான் நகைச்சுவையானது. அவருக்கும் இந்த வேலைக்கும் என்ன சம்பந்தம் என்பது எனக்குப் புரியவில்லை. உங்களுக்குப் புரியவைக்க வேண்டுமென்றால் இப்படிச் சொல்லலாம். கசாப்புக் கடைக்காரர் மிருகவதை ஒழிப்பு அமைப்பில் அலுவலராக விண்ணப்பித்த மாதிரி என்று சொல்லலாம். அவர் ஒரு அகதிகள் தொடர்பாளர் (Flyktning Konsulent) பதவிக்கு விண்ணப்பித்திருந்தார். இவருக்கு இந்தப் பதவி கிடைத்ததா என்பது தெரியவில்லை. ஆனால் பொதுவாக இவரது 'அரசியலுக்கும்' வேலைக்கும் உள்ள 'நெருக்க'த்தால் அப்படி வழங்கப் பட்டிராது என்பதே எனது நம்பிக்கை.

* தொண்டமானுக்கு யார் இந்த 'ஐடியா'வைக் கொடுத்திருப்பார்களோ தெரியாது, அதாவது எப்படியும் பேச்சுகள் நடத்த ஒரு சிங்கள இனவாத அமைப்பும் அனுமதிக்கப் போவதில்லை, அவர்கள் ஏதாவது காரணம் கண்டுபிடிப்பார்கள், எனவே ஒரு 'புறொப்போசலை'க் கொண்டு காணும் பேச்சு நடத்த?' என்றுதான் இறுதியில் கேட்டிருப்பார்கள். பேச்சுகள் நடத்தமுடியாத சூழ்நிலை வந்தது தொண்டமானுக்குத் தான் லாபம். 'அட நானும் முயன்றேன், சரிவரவில்லை' என்று கொஞ்சக் காலம் சொல்லித் திரியலாம். ஆனால் அரசாங்கத்தில் இருப்பவர் என்ற முறையில் தொண்டமான் செய்யக்கூடிய உருப்படியான வேலை ஒன்றேயொன்று இருக்கிறது, அது என்னவென்றால், முதலில் இலங்கையில் இனப் பிரச்சனை தோன்றவும் இன்றுவரை அது தீர்க்கப்படாமல் இருக்கவும் நந்தி மாதிரி இருக்கும் சிங்கள இனவாதத்தை அம்பலப்படுத்தி, அதனோடு நிற்பவர்கள்தான் நாட்டைப் பிரிக்கத் தூண்டுகிறார்கள் என்ற உண்மையை வெளிச்சத்துக்குக் கொண்டுவருவதுதான். செய்வாரா தொண்டமான். அப்படி அவரால் செய்ய முடிந்தால் புலிகளுடன் பேச அவர் போகவேண்டிய அவசியமே வந்திராது. அடுத்த தரம் தொண்டமானை யாராவது பார்த்தால் என்சார்பில் இந்தக் கேள்வியைக் கேளுங்கள்.

'எதுக்கு எனது பிழைப்பில் மண்ணை

கோடைகால ஒலிம்பிக்கிலும் இதே வெற்றிகளைக் குவிக்க முடியுமா என்பது (மிகச்) சந்தேகமே. ஆனால் இந்த நாற்பதுலட்சம் சனத் தொகையை வைத்துக் கொண்டு, ஒரு குட்டி நாடாக மற்றைய நாடுகளைப் பின்தள்ளி இத்தனைதூரம் முன்னுக்கு வந்தது ஆச்சரியம் தரவேண்டிய விசயம்தான்.

பிரிட்டனின் நிலைமை இந்த ஒலிம்பிக்கில் சொல்லக்கூடிய நிலைமையில் இல்லை. சந்தேகமானவர்கள் பட்டியல், புள்ளி விபரங்களைப் பார்க்கவும். இவர்களால் இந்தப் பெரிய சனத்தொகையை வைத்துக்கொண்டு ஏன் ஒன்றும் சாதிக்க முடியாமல் இருக்கிறது என்பது விளங்கவில்லை.

எம்மருமைத் தாய்நாடாம் இலங்கையும் இந்த வழிதான். ஒருவேளை அவர்கள் போகும்போது சொல்லிக் கொடுத்தவற்றுள் இந்தக் (பின்னேநிற்கும்) கலையும் அடக்கமோ தெரியாது. ஒருநாளாவது, ஒரு ஒலிம்பிக் பதக்கமாவது எடுப்பதில்லை என்பது இலங்கையின் விரதமாக இருக்கலாம், யார் கண்டார்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தங்கநகையா? தங்கநகையா? தங்கநகையா? தங்கநகையா?
தங்கநகையா? தங்கநகையா? தங்கநகையா? தங்கநகையா? தங்கநகையா?

நோர்வேயில் 22கரட் தங்கநகையைப் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம் CITY TRADERS, ஒஸ்லோ

நீங்கள் விரும்பிய டிசைன்களில் நகைகளைப் பெற. நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம் CITY TRADERS

நகைகள் மாத்திரமன்றி திருமணம் மற்றும் விசேட வைபவங்களுக்குரிய பட்டுச் சேலைகள் வேட்டிகளையும் எம்மிடம் பெறலாம்

எமது விற்பனை நிலையத்திற்கு ஒஸ்லோ GRØNLAND T _ bane நிலையக் கடைத்தொகுதியில் நேரில் விஜயம் செய்யலாம்

எமது தொலைபேசி இலக்கம்:



– எமது விற்பனை நிலையத்தில் விற்பனையாகும் 22 கரட் தங்கநகைகள் நோர்வே அரசின் நுகர்வோர் கட்டுப்பாட்டுப் பகுதியால் உத்தரவாதம் செய்யப்பட்டவை –

www.tamilarangam.net

# முடிவு எப்போது?

டிசம்பர் மாதத்தின் இறுதி வாரம்.
வழமைபோல தனது புத்தகக் கடையில் வீட்டுக்குத் தேவையான மரக்கறிச் சாமான்களை வாங்கிவந்து வைத்துவிட்டு வியாபாரத்திற்காக உட்கார்ந்திருந்தார் அவர். சில நிமிடங்களில் ஆயுதமேந்திய புலிவீரர்கள் சைக்கிளில் வந்து குதித்தனர். யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் இருந்த அந்தப் பழைய கடைத் தொகுதியிலிருந்த இந்தப் பிரபலமான – ஆனால் முக்கி முனகி இயங்கிக் கொண்டிருந்த – புத்தகக் கடைக்குள் அவர்கள் நுழைந்தனர்.

புத்தகங்களை விற்பது ஒரு பணம் தரும் வியாபாரமாக இருந்த முன்னைநாள் யாழ்ப்பாணம் அல்ல இது இன்று. புத்தகங்களைப் படிக்க நேரமில்லாமல் தமது அன்றாட ஜீவனோபாயத்திற்காக அழவேண்டியது ஒருபுறம். இந்தக் குறிப்பிட்ட கடையின் புத்தகங்களைப் படிப்பது தேசத்துரோகமாகக் கருதப்படுமோ என்ற அச்சம் மறுபுறமுமாக புத்தகங்கள் விலைபோகாத ஒரு புத்தகக் கடையாக அது மாறிவிட்டது.

அந்தப் புத்தகக் கடைதான் 'யாழ் புக் ஹவுஸ்'

நுழைந்தவர்கள் புத்தகங்கள் படிப்பதற்கே என்பதை அறியாதவர்கள் என்பதால் விடயம் வேறு என்பது வியாபாரத்திற்காக உட்கார்ந்திருந்த அவருக்குத் தெரிந்திருந்தது.

சீன உளவாளி என்றும் இன்னோரன்ன வேறு அடைமொழிகளாலும் அழைக்கப்பட்ட முன்னைநாள் கொம்யூனிஸ்ட் கட்சியின், உறுதி குலையாத ஒரு கொம்யூனிஸ்ட் அவர். தேசத்தினதும், மக்களதும் விடுதலையில் ஆர்வமும் அக்கறையும் கொண்டிருந்தபோதும் நடைமுறையிலுள்ள 'அரசியற் பாதையில் நம்பிக்கை அற்றிருந்த' காரணத்தால் 'துரோகியாக இருக்கக் கூடுமோ' என வழமைபோல அநியாயமாகச் சந்தேகிக்கப் பட்டவர் அவர்.

அவர் வேறு யாருமல்ல.

அறுபதுகளில் தீவிர கொம்யூனிஸ்டும், போராளி பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரும், எழுபதுகளிலும் எண்பதுகளிலும் பலராலும் மதிக்கப்பட்ட அறிவாளிகளில் ஒருவருமான மணியண்ணைதான் அவர்.
மாற்றுக் கருத்தாளரையும் மதிக்கத் தெரிந்த பண்பாளரான அவர் ஒரு குழந்தைக்குத் தந்தை. ஒன்றரை வயதான குழந்தைக்குத் தகப்பனான அவர் தனது குடும்பத்தின் நிலை பற்றி எடுத்துக் கூறியது எப்போதும் போலவே புலிகளுக்குக் கேட்கவில்லை.

www.tamilarangam.net

அறுபதுகளில் அரசியற் காரணங்களுக்காகப் பல்கலைக்கழகப் படிப்பை உதறிவிட்டு முழுநேரக் கொம்யூனிஸ்ட் கட்சி (மா-லெ) உறுப்பினராகிய மணியண்ணை தொழிலாள விவசாயிகளின் விடுதலைக்காக தன்னை எந்த நேரமும் அர்ப்பணிக்கத் தயாராக இருந்த ஒரு தேசபக்தன்.

'விசாரணை'க்காக புலிகளால் அழைத்துச் செல்லப்பட்ட மணியண்ணை எதிர்பார்த்தது போலவே இன்றுவரை விடுவிக்கப்படவில்லை. இலங்கையின் இனவெறி அரசு இந்திய மேலாதிக்கம் என்பவற்றை உறுதியாக எதிர்த்த அவர் மக்களின் சனநாயகம், விடுதலை என்பவற்றின் அவசியம் தேசவிடுதலைக்கு ஒரு தவிர்க்க முடியாத முன்நிபந்தனை என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருந்தவர் என்பது மட்டுமே அவரது 'துரோகம்'.

அண்மைக்கால கைதுகளான கேசவன் முதல் செல்வி, தில்லைநாதன் வரையான கைதுகளில் இவர் பதின்மூன்றாவது நபர்.

கடத்தப்பட்டதற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை. அப்படித் தெரிவிப்பது அவசியம் என்ற அம்சம் புலிகளின் அகராதியில் ஒருபோதும் இல்லை.

மனிதர்களது சிந்தனையை நசுக்கி தாம் நினைப்பதைத் தேசபக்தி என்று சாதிக்கும் 'விடுதலை'ப் புலிகளது போராட்டம் தேடித் தந்திருப்பது அராஜகத்திற்கும் அடக்குமுறைக்கும் மனிதப் படுகொலைகளுக்குமான சுதந்திரத்தையே.


தேசத்தின் வாயை மூடிவிட நினைக்கும் புலிகளுக்கு ஒரு வார்த்தை: இதை மூடுவதற்கு உள்ள ஒரேவழி முழுத்தேச மக்களையுமே கொன்றுவிடுவதுதான்! அதைச் செய்யுங்கள். பின்னர் மனிதர்கள் இல்லாத தேசத்தில் புலிகள் மட்டுமே உறுமும் விடுதலை வாங்கித் தந்த பெருமை உங்களுக்குச் சேரும்.

உலகெங்கும் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களே.......
கேசவன்.....செல்வி....தில்லை.....வரிசையில் இன்று புதிதாக மணியண்ணை.
இன்னும் எத்தனைபேரோ? இந்த மனிதப் படுகொலைகளுக்கு முடிவு கட்டுவது எல்லோரும் அழிந்தபின்பா?

**நண்பர்கள் (ஈழம்)**

*எந்நேரத்திலும் கொல்லப்படக் கூடிய சூழலிலிருந்து வரும் இப்பிரசுரத்தை இயன்றவரை எல்லோருக்கும் கிடைக்கச் செய்யுங்கள்.*

www.tamilarangam.net




## கடலும் துளியும்

இது நிகழ்ந்து ஒரு எட்டு வருடம் போயிருக்கலாம். இப்போதும் மனதில் பசுமையாக இருக்கிறது. இத்தனை காலம் எப்படிப் போனது என்பது தெரியவில்லை.

யாழ் பண்ணைக் கடலின் வாடையையும் இரைச்சலையும் மெல்லிதாய்க் காவிவரும் தென்றல். சோகத்தின் வாயிலில் தமிழர்களின் இதயம் வென்ற யாழ்நூலகம். அதன் பக்கவாடாக மக்கள்கூடி மகிழவென்ற திறந்தவெளியரங்கு. வெட்டாத புல் பூண்டுகள் முழங்கால் உயரத்தில், விலத்தி நடக்கிறோம். வெய்யிலின் கொடிய வெப்பம் இன்னும் மண்ணில் பதிந்திருந்தது. திறந்த வெளியரங்கின்பின் பக்கவாட்டில் ஒரு சிறிய அறை. அங்குதான் அந்த இலக்கியக் கூட்டம் நிகழ்வதாக இருந்தது. ஏற்கனவே நாம் பிந்தியாயிற்று.

தமிழகக் கவிஞர் ஒருவரின் வருகையையொட்டி அந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனக்கு அந்தக் கவிஞரின் பெயர்கூடத் தெரியாது. கடைசிநேரத்தில் நண்பன் சொன்ன தகவலை அறிந்ததில் அவர் ஒரு கவிஞர் என்று மாத்திரம் தெரியும். தமிழகத்தில் இருந்து ஒரு இலக்கிய உள்ளத்தை அதுவும், ஒரு கவிஞரைச் சந்திக்கப் போவது மாத்திரம் மனதை அன்றைக்கு நிறைத்திருந்தது. கன்றுக்குட்டித் தனமாக நானும் ஏதாவது எழுதவேண்டும் என்று ஆரம்பித்த காலம் அது. நானும் எனது ஓரிரு 'கவிதை'களைக் கிறுக்கிப் பார்த்த காலம். சுஜாதாத் தனத்தில் இருந்து விலகி வைரமுத்துவை ரசித்த நேரம். இதனால் எனக்கு ஆவல் வந்ததில் வியப்பில்லை.

அரக்கப் பரக்க ஓடி உள்ளே சென்றால் கூட்டம் தொடங்கியிருந்தது. ஒரு ஐம்பது அறுபது பேர்வரையில் நிற்கவும் முடியாமல் இருக்கவும் முடியாமல் மூச்சுத் திணறியபடி அந்தச் சிறிய அறையினுள்

www.tamilarangam.net

நின்றிருந்தனர். உள்ளே யாழ்ப்பாண வெயில் தனது சண்டித்தனத்தைச் செய்யத் தவறவில்லை. முன்னால் நடுவே மேசை. நடுவில் ஓர் இளைஞர் பேசிக்கொண்டிருந்தார். அவருக்கு வயது இருபது இருக்கும். பக்கமாக இருந்தவரில் ஒருவர் யாழ்ப்பாணத்தவர்க்கு நன்கு பழக்கமானவர், எழுத்தாளரும் சஞ்சிகையாளரும். இவர்கள்தான் கூட்டம் ஒழுங்குபடுத்தியவர்கள் எனப் புரிந்துகொண்டேன்.

இளைஞர் சரளமாகவே பேசினார். தோற்றத்தில் அசல் தமிழக இளைஞராக இருந்தார். இந்தச் சிறிய வயதில் கவிஞராகி இலக்கியக் கூட்டங்களில் பங்கெடுக்க வேறு நாடுகளுக்கும் அழைப்புப் பெற்று வந்திருக்கிறாரே என்பது எனது வியப்பு. அருகில் இருந்தவரிடம் காதைக் கடித்து என்ன பெயர் என்று கேட்டேன். 'மேத்தா தாசன்' என்றார்.

அப்போது தமிழகப் பத்திரிகைகளில் மேத்தாவின் கவிதைகள் படித்து ஒரு பெரிய கவிஞராக அவரை நினைத்திருந்தேன். அதனால் இந்தப் பெயரும் இலகுவில் நினைவில் நின்றது. பாரதியில் இருந்து பாரதிதாசன் வந்ததுபோல் இருக்குமோ? நான் நினைத்தபடியே, அது அவரது புனைபெயராக இருந்தது. மேத்தாவை தனது மானசீகக் கவியாகவும், வழிகாட்டியாகவும் கருதியதால் தான் அவ்வாறு பெயர்சூடிக் கொண்டார் என்று அவரது பேச்சில் கேட்டது சுவாரஸ்யமாக இருந்தது.

அந்தத் தமிழகக் கவிஞரைக் கண்டு பேச மிக ஆவலாக இருந்தது. எனது நண்பருக்கும் அதே ஆசைதான். கூட்டம் முடியவும் அவரைச் சந்திக்க முயல்கிறேன், முடியவில்லை. அடுத்தடுத்த நாட்களில் மீண்டும் மீண்டும் முயல்கிறேன். முடியவில்லை. ஏற்பாட்டாளர்களின் தட்டிக்

## பத்தோடு ஒன்று பதினொன்று

நிர்ப்பந்தமான மனுஷன் நான்.

வானுக்குக் கீழே
பரதேசியும், நான்
பாடுள்ளவனும்

தனியொரு மனிதன்
நிர்ணயம் செய்கிறான்
என் தலைவிதியை
விசா அதிகாரியாக.

மறந்தான் போலும் படைத்தவன்
குறித்திட நாடு
பூகோளத்தில் தமிழனுக்கு.

வாழ்வது எங்கு?
அடிப்படை வினாவோடு
பயணமாகிறேன்
பத்தோடு ஒன்று பதினொன்றாக
வழிகாட்டும் சைகைகள்
பிடுங்கப்பட்ட நெடுஞ்சாலையில்.

● *நீ.ஜோன் ஸ்டீபன் குரூஸ்*

கழிக்கும் மனோபாவம் நன்கு புலப்பட்டது. இளம் வயதினர்க்கு ஏற்படும் ஆர்வங்களை வளர்த்தெடுக்க முதிய இலக்கியக்காரார்கள் தயங்குவதாகவே எனக்குப் புரிந்தது.

நண்பருக்கு அப்படியல்ல, நீண்டகாலமாகவே இலக்கிய உலகம் பற்றி அறிந்தவர். ஈடுபாடும் உள்ளவர். 'தமிழ் இலக்கியம் வளராததற்கு உதுகள்தான் காரணம், சிங்களவரில்லை' என்று வழிநெடுகத் திட்டிக்கொண்டே வந்தார்

www.tamilarangam.net

ஏனோ இந்த நிகழ்ச்சி எனது மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது. இந்த நிகழ்ச்சிகூட ஒருவகையில் எனது கவிதை ஈடுபாட்டுக்குக் காரணமாகியது.

இந்தச் சம்பவம் நடந்தபின்னர் மேத்தாதாசன் பற்றி எதுவும் அறியமுடியவில்லை. அவரின் ஆக்கங்களும் படிக்கக் கிடைக்கவில்லை. ஆனால் அவரது நினைவு மட்டும் அடிக்கடி வந்துபோகும்.


இதற்குப் பின்னர் கடந்துபோன வருடங்களில் மேத்தாவின் கவிதைகள் தமிழக ஜனரஞ்சகப் பத்திரிகைகளில் வரும்போது மேத்தாதாசனின் நினைவும் உருவமும் என்முன்னே தோன்றிப் பேசி மறையும்.

கடந்த கிழமை தற்செயலாக தினகரன் வாரமலர் படிக்கக் கிடைத்தது. அதில் மேத்தாதாசனின் படமும் கவிதைவரிகளும் கிடக்க விழுந்தடித்துப் படித்தேன். அருகில் ஒரு அடிக்குறிப்புக் கண்டு துணுக்குற்றேன். காரணம் மேத்தாதாசன் அகால மரணமாகியதாகியதற்காக அவரது வரிகள் காணிக்கையாக்கப் பட்டிருந்தன. இந்த இடைப்பட்ட காலத்தில் மேத்தாதாசனின் யாழ் வருகைக்கு என்னை இழுத்துச் சென்ற எனது நண்பருக்கு இலங்கை ராணுவத்தின் ஷெல் பட்டு ஒரு கால் பறிபோனதும் எனது மனதை மேலும் உறுத்துகின்றன.

பழைய நினைவுகளை மீட்டியவாறு ஜன்னலின் வெளியே பார்க்கிறேன். பள்ளத்தாக்கும், உயரும் மறுகரையில் ஒஸ்லோ நகரமும் விரிய இடையில் இலைகளை இழந்த மரங்களின் சோகமும், ஜன்னலைத் திறக்க அறைந்துமூடும் குளிரும் அதிகமாகவே உறுத்துகின்றன●

## தொண்டமானும்......,

ஆண்களுக்குச் சமமாக பெண்கள் ஆதிக்கம் செலுத்தத் தகுதி உடையவர்கள்




என அண்மையில் நிகழ்ந்த கூட்டம் ஒன்றில் தொண்டமான் கூறியுள்ளார். அவரது தனிக்காட்டு ராஜாங்கம் நடத்தப்படும் மலையகத்தில் பெண்கள் நடத்தப்படும் விதம் பற்றி அனைவரும் அறிவர். குறிப்பாகப் பெண் தொழிலாளர்களுக்கும் ஆண்களுக்கும் இடையிலான சம்பள வித்தியாசம் தொடர்ந்தும் எந்தக் கேள்வியுமின்றி அமுலாக்கப்படுகிறது. இதைக்கூடச் சாதிக்கமுடியாமல் பெண்களின் உரிமைகள் பற்றி வெட்டிவிழுத்தும் தொண்டமானின் மக்களை மயக்க முயலும் பேச்சின் உள்நோக்கம்தான் என்ன?

மலைமகன்

www.tamilarangam.net



'SUVADUHAL'
A Tamil Monthly From Norway, February 1992, Issue nr 33

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்